


# மலர்ச்சியும் வளர்ச்சியும்

தத்துவமேதை
டி. கே. சீனிவாசன்

மலர்ச்சியும் வளர்ச்சியும்

# மலர்ச்சியும் வளர்ச்சியும்

தத்துவமேதை டி. கே. சீனிவாசன்

சந்தியா பதிப்பகம்
52, முதல் தளம், நான்காவது தெரு, அஞ்சுகம் நகர்,
அசோக் நகர், சென்னை - 600083, தமிழ்நாடு.
Phone : 044 - 4899968

மலர்ச்சியும் வளர்ச்சியும்

டி. கே. சீனிவாசன்

வெளியீடு : சந்தியா பதிப்பகம்,
52, முதல் தளம், நான்காவது தெரு,
அஞ்சுகம் நகர், அசோக் நகர்,
சென்னை - 600083.

சந்தியா பதிப்பக வெளியீடு : 79

MALARCHIYUM VALARCHIYUM

T. K. SRINIVASAN

| | | |
|---|---|---|
| First Edition | : | 2002 |
| Size of Book | : | 1/8 Demy |
| No. of Pages | : | 64 |
| No. of Copies | : | 1000 |
| Paper used for text | : | 18.6 Maplitho |
| Printing Type | : | 11 Points |
| Publisher | : | Sandhya Natarajan |
| Published by | : | Sandhya Publications,<br>52, First Floor, Fourth Street,<br>Anjugam Nagar, Ashok Nagar,<br>Chennai - 600083, Tamilnadu, India.<br>Phone : 044 - 4899968 |
| Typeset at | : | Pudhumaippiththan Graphics, Chennai - 83. |
| Printed at | : | Chennai Micro Print Pvt. Ltd., Chennai - 29. |
| Price | : | Rs. 25/- |

# மலர்ச்சியும் வளர்ச்சியும்

எரியும் திரியில் நெளிந்தது அந்த ஒளித்துண்டு. அசைந்து கொண்டிருந்த காற்று அதற்கேற்பட்ட ஆனந்தத்தால் ஆடத் தொடங்கியது. ஒளி அழிந்தது. இருள் சிரித்தது. இதயம் அழுதது. எண்ணங்கள் உருப்பெற முடியாமல் உதிர்ந்தன. தெளிவற்ற சூழ்நிலைக்குப் பலியானது வாழ்வு. உலகம் ஒரு உதவாக்கரை உருண்டையாக தன் உருவத்தைக் காட்டியது. ஒன்றுமே இல்லாத உயரத்தில் எதையோ தேடி அதிலேயே ஒன்றித்துவிட்டது அந்த உள்ளம்.

இதயங்கள் இணைந்து இசைக்கும்போதுதான் வாழ்வு மழலையாக மடியில் தவழுகிறது. இணைப்பில் ஏதாவது சிறு கோளாறு ஏற்பட்டாலும் அது எட்டித் தள்ளப்பட்ட குழந்தையாகி எதிர் நின்று கதறுகிறது. செல்வம் கொழிக்கும் குடும்பங்களில் பிறக்கும் பெண்களின் வாழ்வு சேணம் பூட்டிய குதிரையைப்போல ஓடிக்கொண்டிருப்பதால், செல்ல வேண்டிய இடங்கள்தாம் அவர்களுடைய கவனத்தில் தங்குகின்றன. இடையில் இருப்பவை எதுவும் அவர்களுடைய எண்ணங்களுக்குச் சிக்குவதில்லை. சிதைந்தவை ஒரு ஓரமாக ஒதுங்கி விடுவதால் அவர்களுடைய சிந்தனைகளை அவை கவருவதில்லை.

நிம்மதியை நிலைகுலைக்கும் நிகழ்ச்சிகள் தங்களை நெருப்பாக்கிக் கொண்டு மனோன்மணியின் நினைவுகளை எரித்துக் கொண்டிருந்தன.

சிறிது நேரத்துக்கு முன்னால் சிவந்திருந்த வானம் கதியற்றுப் போனதால் கறுத்துப் போய்விட்டதே என்று கவலைப்பட்டாள் மனோன்மணி. அதில் பரவிக் கிடந்த தாரகைகள் அனைத்தும் தன்னிடம் உருவாகிச் சிதறிய சிந்தனைகளாக இருக்குமோ என்ற சந்தேகம் தோன்றிற்று அவளுக்கு. எதற்கும் உதவாது இறைந்து கிடக்கும் அந்த ஒளித் துணுக்குகளை எண்ணி இரக்கப்பட்டாள்.

கல்லூரிப் படிப்பை வெளியூரில் தங்கி முடித்துக் கொண்டு ஊர் திரும்பிய மனோன்மணி ஏதோ ஒரு சாமான் வாங்கக் கடைத் தெருவுக்குச் சென்றிருந்தாள் ஒருநாள். ''வயிற்றைப் பசிக்கிறதம்மா, ஏதாவது போடு,'' என்று பின்னாலிருந்து எழுந்த பெண் குரலொன்று அவளைத் தன்வயப்படுத்தியது. திரும்பிப் பார்த்தாள். அம்பொன்று பாய்ந்து பதிந்ததுபோல அலறின அவளுடைய விழிகள்!

அவளுடைய பள்ளித் தோழி பார்வதி...! எலும்புக்கூடு ஒன்று எதிரே நின்று பேச முயற்சிப்பதைப் போல எழுப்ப முடியாத நிலையிலும் தனது ஈனக் குரலைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

''பார்வதி...!'' என்று கதறிய மனோன்மணி ஓடிச் சென்று அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

களிமண் சுவற்றில் ஒட்டப்பட்ட கவர்ச்சி நிறைந்த திரைப்படச் சுவரொட்டிபோல அனைவரையும் கவர்ந்தது அந்த இணைப்பு. அந்தத் தெரு தேங்கிவிட்டது. திகைத்து நின்ற பார்வதியும் தேம்பியழும் மனோன்மணியும் இதை உணரவில்லை. உணர்ச்சிகளிடமிருந்து விடுபட்டபோது குறுகிச் சிறுத்த இதயங்கள் அவர்கள் இருவருடைய தலைகளையும் குனியச் செய்தன.

''வா. முதலில் காரில் ஏறு. போகும்போது பேசிக் கொள்ளலாம்,'' என்று கூறி, பார்வதியை அணைத்து இழுத்துச் சென்று தன் காருக்குள் அமரச் செய்தாள் மனோன்மணி.

தானிருந்த அவல நிலையில் அவளை என்ன சொல்லி அழைத்துப் பேசுவது என்பதையே நிர்ணயிக்க முடியாது தவித்த பார்வதிக்கு இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் இடங் கொடுப்பதை தவிர வேறு வழியே இல்லாமல் போயிற்று.

குளுமையே உருவான நேரத்தில் பசுமை செழித்த புல் தரையில் பாதங்களைப் பதித்து நடப்பதைப் போன்ற வாழ்வைப் பெற்றாள் மனோன்மணி. வளமை அவளுடைய அன்றாடச் செலவாக மட்டும் இருக்கவில்லை; இறுதிவரை வற்றாத எதிர்காலச் சேமிப்பாகவும் இருந்தது. அவளுக்கு இருப்பவன் ஒரே அண்ணன்தான். அவனுடைய பாதுகாப்பில்தான் அவளை ஒப்படைத்துவிட்டுக் கண் மூடினார்கள் அவர்கள் இருவருடைய அம்மாவும் அப்பாவும். அவன் அவளுக்கு அண்ணனாக மட்டும் இருக்கவில்லை; அடைகாப்பவனாகவே வாழ்ந்தான்.

பார்வதியின் பெற்றோர் பணத்தில் மிதந்தவர்கள் அல்ல. அது அற்றுப்போன குட்டையில் ஆழப் புதைந்திருந்தவர்கள்தாம். நகராட்சித்

தெருக் குழாய்களில் நீர் வருகிற நேரம் பார்த்து வம்பு செய்து பாத்திரங்களை நிரப்பிக் கொள்ளுவது போலத்தான் அவர்களுடைய வருவாய் அமைந்திருந்தது. மகிழ்ச்சிக்காக வாழ்வைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தனர். இந்த நிலையிலும் தங்கள் உள்ளங்களைத் துணிகளாக்கி வடிகட்டித் துன்பத்தின் சிறு துணுக்குகள்கூடக் கலக்காத சாறாகவே வாழ்வைத் தங்களுடைய ஒரே மகள் பார்வதிக்குத் தந்து அவளை வளர்த்தனர்.

அந்த நாட்களில்... பட்டுப் பாவாடையையும் அதற்கொத்த தாவணியையும் நித்தம் நித்தம் அணிந்து பள்ளிக்கு வந்தவர்கள் மனோன்மணியும் பார்வதியும் மட்டுந்தான். மற்ற மாணவிகளுடைய மானத்தை மட்டமான துணிகள்தாம் காத்து வந்தன. இணையானவர்கள் என்ற தோற்றந்தான் இவர்கள் இருவரையும் ஒருவருக்கொருவர் துணையானவர்களாக்கிற்று.

ஒத்துப் பார்ப்பது - ஒப்பிட்டுப் பேசுவது - நினைவுகளை ஒன்றோடொன்று பின்னி இணைப்பது - பள்ளிப் பருவத்துப் பெண்களின் இந்தப் பழக்கம் ஓய்ந்த நேரம் என்று எதையும் ஒதுக்கிவிடாமல் தடுக்க இருவருக்கும் உதவிற்று. எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளுபவர்களாக மட்டும் இவர்கள் இருவரும் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் குழாயில் நீர் பிடித்துக் குளிப்பது போலத்தான் இவர்கள் தொடர்பு இருந்திருக்கும். இதயங்களையே பங்கிட்டுக் கொண்டார்கள். பொழியும் மழையில் நனைவதுபோல உணர்ந்தார்கள். ஈரம் துடைக்கப்பட்டால்கூட இதயங்கள் புல்லரித்தன. நினைவோ அல்லது கனவோ எதுவாக இருந்தாலும் அரும்பும்போதே பறித்தெடுத்து அப்படியே பார்வதியிடம் ஒப்படைப்பாள் மனோன்மணி. அதை மலரச் செய்து தன் தோழியின் தலையில் சூடி முகர்ந்து அனுபவிப்பாள் பார்வதி.

கொடியாகப் படர்ந்தவளும் செடியாகப் பிறந்தவளும் சேர்ந்தே இருந்துவிட முடியவில்லை. பள்ளிப்படிப்பு முடிந்தது. கல்லூரிப் படிப்புக்குக் கண்காணாத தூரம் போக வேண்டி நேரிட்டது. செலவழிக்கும் நிலை படைத்தவள் அதற்கு ஆயத்தமானாள். மனமிருந்தும் பணமற்றவள் அவளை வழியனுப்பி வைத்தாள். அஞ்சலகங்கள் அந்த இளம் நெஞ்சுகளுக்குத் தஞ்சமளித்தன. அதுவும் நீடிக்கவில்லை. மனோன்மணி பார்வதிக்கு அனுப்பிய கடிதம் ஒன்று 'முகவரிக்குச் சொந்தக்காரரைக் கண்டுபிடிக்க முடியாததால் திருப்பி அனுப்பப்படுகிறது,' என்ற குறிப்போடு அவளுக்கே கிடைத்தது. தன் அண்ணனுக்கு அவளைப் பற்றி விசாரிக்கும்படி கடிதம் எழுதினாள் அவள். அதை அவன் படித்துப் பார்த்ததாகவே காட்டிக் கொள்ளாமல் தன் கடிதங்களை எழுதி அனுப்பிக் கொண்டிருந்தான்.

பார்வதிக்கு நேர்ந்தது பல பேருக்குச் சமுதாயத்தில் ஏற்படுவதுதான். பார்த்துப் பழகுகிற நிகழ்ச்சிகள் பல பரிசீலனைக்கு உள்ளாகாததால் கேள்விப்படும்போது பயங்கரமாகத் தோன்றுகின்றன.

மத்தியதர வகுப்பினர் உயர்வையும் அடைவதில்லை; உழைக்கவும் பழகுவதில்லை. வருமானத்துக்கு உரித்தானவர்கள் இறந்தவுடன் அவர்களை நம்பித் தங்கள் வாழ்வை அவர்களிடம் ஒப்படைத்தவர்கள் நாசமாகி விடுகிறார்கள். பார்வதியின் அப்பா இறந்தார்; அவர்களுடைய அம்மா அந்த அதிர்ச்சி தாங்காது அவரைத் தொடர்ந்தாள். வரவுக்கு வழியிருக்கிறது என்று தெரிந்தால்தான் வாடகை வீடுகளில் வசிக்கஇடங் கொடுப்பார்கள். இல்லாதவள் இவள் என்று தெரிந்ததும் இழுத்து வெளியே தள்ளிக் கதவை இறுக மூடிவிட்டார்கள்.

எங்காவது வேலை செய்து எதிர்காலத்தை இருள் சூழாமல் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் பார்வதிக்கு ஏற்படாமல் இல்லை. ஆற்றலுக்கு மதிப்புத்தரும் சமுதாயமாக இருந்திருந்தால் அவளுக்கு வேலை கிடைத்திருக்கும். அந்தஸ்தோடு இருப்பவர்களின் ஆதரவுதான் அதற்குத் தேவையான தகுதியாக மதிக்கப்படும்போது...? அதற்கும் முயற்சி செய்தாள் அவள். அச்சாரம் பெறாமல் ஆதரவு தர அப்படிப்பட்டவர்களின் அந்தஸ்து இடங் கொடுக்கவில்லை. ஏதோ ஒரு விதத்தில் மானம் காணாமல் போவதைவிடப் பிச்சை எடுப்பதால் அதை இழப்பது பெரிதாகத் தோன்றவில்லை பார்வதிக்கு.

இழந்ததைப் பற்றிய ஏக்கம் எவ்வளவுதான் நம் இதயத்தை அதன் பக்கம் இழுத்துப் பிடித்தாலும், வாழ்வில் குறுக்கிடுகிற ஓரிரண்டு நிகழ்ச்சிகள் அதைவிட்டு நகர்த்திவிடுகின்றன. எல்லைக் கல்லை காலம் பதித்து விடுகிறது. இணைப்பைப் பற்றிய எண்ணம் இற்றுப்போகிறது; ஏக்கமும் அற்றுப் போகிறது. புதிய உறவுகள் பழைய தொடர்புகளுக்குத் திரைகளாகின்றன. அடுத்தடுத்து விதைத்து வளர்ப்பதற்கு ஏராளமான விதைகளை காலம் உருவாக்கும்போது, அறுக்கப்பட்ட செடியின் அடித்தாளே அடுத்து வளரும் செடிகளுக்கு உரமாக அமைந்துவிடுகிறது.

ஆனால்... இப்போது... செல்லரித்துப்போன பழைய புத்தகத்தை எடுத்துப் பார்ப்பது போலப் பார்வதியை மனோன்மணி பார்க்க நேரிட்டிருக்கிறது.

சாய்ந்து உட்கார அவளுக்கு மனம் வராததாலோ அல்லது அப்படி உட்காருவதை அவளுக்கு உடல்நிலை அனுமதிக்காததாலோ ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு காரின் வேகத்துக் கேற்றபடி ஆடிக்கொண்டிருந்தாள் பார்வதி.

ஊருக்கு அப்பால் ஒரு ஓரமாகக் காரை நிறுத்தினாள் மனோன்மணி. அவல நிலைக்குப் பார்வதி எப்படி ஆளானாள் என்பதைச் சொல்லும்படி அவளைக் கேட்டாள். பதில் பேச முடியாத பதுமையாகி விட்டவள் போல அவளைப் பார்த்தாள் பார்வதி.

''ஏன் கூச்சப்படுகிறாய், பார்வதி? இதயங்களுக்கு எப்போதும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதே இல்லை. நீ எதைச் சொன்னாலும் அதை இழிவாக நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்,'' என்று அவளுக்குத் துணிவூட்டினாள் மனோன்மணி.

''ஏழ்மை என்பதே, எதையும் இழந்த நிலைதான், மனோ,'' என்று வலிவில்லாத குரலில் தெளிவாக்கத் தேவையற்ற கருத்தைச் சுருக்கிச் சொன்னாள் பார்வதி.

பார்வதியை ஒரு கையால் அணைத்துத் தன் உடலோடு இணைத்தாள் மனோன்மணி. தன் இதயத்தில் அவள் பெற்றிருந்த இடம் அடியோடு அழிந்து போகாததால் புதிய பொலிவோடு ஒளிவிடுகிறது என்பதை அவளுக்கு உணர்த்துகிற பார்வையால் அவளுடைய விழிகளைச் சந்தித்தாள்.

''செத்துப்போன உள்ளங்கள்தாம் உண்மைகளை ஒத்துக் கொள்ளும் அளவுக்குச் சத்தற்று வாழ்பவை. என் உள்ளம் அரும்பி மலர்ந்திருக்கிறது. வேதனைகளை வேண்டியவர்களிடம் ஒப்படைக்க மறுத்தால் அவற்றுக்கு விமோசனமே ஏற்படாமல் போய்விடும்.''

கோபத்தைக் கலந்து - ஆனால் அதன் வேகத்தைக் குறைத்து - அறிவுரையா அல்லது அச்சுறுத்தலா என்பதை நிர்ணயிக்க முடியாதபடி பேசினாள் மனோன்மணி.

பார்வதி பேசினாள். இறந்தகால நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்துகிறாளோ அல்லது இதயத்திலிருந்து இரத்தத்தை வடியச் செய்கிறாளா என்பது புரியாமல் தவித்தாள் மனோன்மணி. நிறுத்தி வைக்கப்பட்ட அவளுடைய இதயம் நீண்ட பெருமூச்சால் தன்னை நிரப்பிக்கொண்டு இயங்கத் தொடங்கியது.

உலகம் தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டால் அதில் உள்ளவையெல்லாம் பிடிப்பற்று அந்தரத்தில் திண்டாடும் என்று அவள் படித்திருக்கிறாள். இப்போது அப்படி எதுவும் நடந்துவிடப் போகிறதோ என்ற அச்சம் ஏற்பட்டது அவளுக்கு. அடிப்படையற்றுத் தவிக்கப்போகும் அத்தனை பொருள்கள் மீதும் அவளுக்கு அனுதாபம் ஏற்பட்டது. ஆபத்து எதுவும் ஏற்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள அவளிருந்த சூழ்நிலையை ஆராய்ந்தாள்.

புத்தகங்களையும் பொழுதுபோக்குகளையுந் தவிர வேறெதிலும் இதுவரை ஈடுபடாதிருந்த அவளை அவளுக்குப் புரியாத புதிய புதிய உணர்வுகள் தோன்றித் தன் பக்கம் திருப்பின. துன்ப நினைவுகள் மூளையைக் கசக்கிப் பிழியும்போது அதிலிருந்து வழியும் நியாயங்களும் உண்மைகளும் அவள் முன்னே தோன்றி வளரத் தொடங்கின.

''பார்வதி! சமுதாயம் நல்ல பண்புகளை நடுவில் நிறுத்தி அவற்றைச் சுற்றி நின்று கும்மி பாடிக் கோலாட்டம் போடப் பழகியிருக்கிறதே தவிர இதயத்தில் வளர்த்து எண்ணங்களாக மலரச் செய்து செயல்களாகக் காய்த்துக் கனியச் செய்வதில்லை.''

சருகான இலைகள் மரத்தைவிட்டு உதிர்வதைப் பார்ப்பதுபோல இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள் பார்வதி.

''இதையெல்லாம் எனக்கு ஏன் எழுதவில்லை, பார்வதி?'' என்று கேட்டாள் மனோன்மணி.

''நிலையில் தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்களிடம் கேட்கும் பதவிக்குப் பெயர் பிச்சை என்றுதான் எல்லோராலும் பெயரிடப்படுகிறது. அது எப்படி அமைந்தாலும் ஒன்றுதானே!''

தன் இதயத்தின் நிமிர்வு நிலைகுலைவதை உணர்ந்தாள் மனோன்மணி.

காரைத் தன் வீட்டை நோக்கி ஓட்டினாள். உள்ளே நுழைந்ததும் வழக்கம்போல வாயிலுக்கு அருகிருந்தே, 'அண்ணா!' என்று குரல் கொடுத்தாள். மாடியிலிருந்து மகிழ்ச்சி பொங்க இறங்கி வந்தான் வாசு.

''உன்னுடைய தோட்டத்துக்கு இன்னொரு மலர் கொண்டு வந்திருக்கிறேன், அண்ணா!'' என்று மகிழ்வோடு அவனிடம் கூறிப் பரிவோடு பார்வதியைப் பார்த்தாள்.

எதையும் விட்டுவிடாமல் எல்லாவற்றையும் அவனிடம் எடுத்துரைத்தாள். தன் தங்கையின் பேச்சுக்காகவே நேரத்தை ஒதுக்குபவன் வாசு. எப்படிப் பேசுகிறாள் என்பதிலேயே எப்போதும் இதயத்தை இழையவிடும் வாசு, அன்றுதான் என்ன பேசுகிறாள் என்பதைக் கவனித்தான்.

''இருக்கட்டுமே, மனோ. நீ உட்கார் அம்மா,'' என்று இருவருக்குமாகப் பதிலைக் கலந்தளித்துவிட்டு அங்கிருந்து அகன்றான் வாசு.

தொடர்ச்சிக்கு வைக்கப்பட்ட அந்த முற்றுப்புள்ளி முழுமையாக மூளியாக்கியதுபோலத் தோன்றிற்று மனோன்மணிக்கு. ஒளியைப் பொழியும் விளக்கு மின்சார இணைப்பு அறுந்துபோனதால் இருளில் அமிழ்வதுபோல அவளுடைய இதயம் தவித்தது.

புதிதாக ஒரு பொம்மையை விளையாடுவதற்குப் பெற்ற குழந்தையாக ஆனாள் மனோன்மணி. பொம்மையாக ஆக்கப்பட்ட பார்வதிக்குப் பொறுமை பரிசீலிக்கப்படுவதுபோலத் தோன்றிற்று.

''இன்னும் ஒரு வாரம் ஆனால் உன்னுடைய ஒட்டிய உடல்கூட உப்பிப் பெருத்துவிடும்'' என்று சொல்லிவிட்டு அதற்கொரு திருஷ்டியும் கழித்தாள் மனோன்மணி.

இரவு இருவரும் படுத்தபோது அந்தப் படுக்கையில் இருந்த தலையணைக்கு அது எதிர்பார்த்த மிருகத்துக்கு எந்த விதத்திலும் பொருந்தாத உருவம் தன்னைப் பங்கிட்டுக் கொண்டது ஏமாற்றத்தைத்தான் அளித்தது.

அலுப்புத்தான் மனோன்மணியை அயரச் செய்ததே தவிர அமைதி அவளுக்கு அறிமுகங்கூட ஆகவில்லை. கடலலைகளைப்போல அந்தக் கட்டிலில் தத்தளித்துக் கொண்டிருந்தாள். செழித்து மலரும் மலரை அதை வளர்த்துவிடும் கிளையே கிள்ளிக் கீழே எறிந்தால்... அவளுடைய அந்த அண்ணன் வாசு அன்று நடந்துகொண்டது... இதயத்தில் எரிந்து கருகின எண்ணங்கள்.

''எல்லாமே இருக்கும்போது எதுவுமே இல்லாததுபோல உனக்கு எப்போதாவது தோன்றியிருக்கிறதா பார்வதி?'' என்று விடிந்ததும் தன் தோழியைக் கேட்டாள் அவள்.

''இல்லை, மனோ. எதுவுமே இல்லாதபோது எல்லாமே இருப்பதுபோல மட்டும் எனக்குத் தோன்றியது.''

முரண்பாடுகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன.

பார்வதியின் நிலை பரிதாபத்துக்குரியதாக ஆனது. கடைத்தெருவில் தன் இதயத்தை அவளுக்குக் காட்டிய மனோன்மணி, வீட்டுக்குள் வந்ததும் அதை வெளியே எடுத்து வீசி எறிந்துவிட்டாளோ என்று அஞ்சினாள். பொழியப் போகிறது மழை என்று பூரிப்படையும்போது குவிந்த மேகங்கள் கலைந்து நகர்ந்தால்... விரக்தியோடு தன் தோழியின் மீது நிலைத்தன அவளுடைய விழிகள்.

''உனக்கு என்ன நேர்ந்துவிட்டது, மனோ?'' என்று கேட்டாள் பார்வதி.

''ஒன்றுமில்லையே!''

பைக்குள் கைவிட்டு அதில் சிக்குவதை வெளியில் எடுத்துப் போடுவதுபோல ஒலித்தது அந்தப் பதில்.

''நீ எங்கேயோ இருக்கிறாய்'' என்றாள் பார்வதி.

நிலைமை அப்போதுதான் புரிந்தது மனோன்மணிக்கு. ஓடிப்போன உள்ளத்தை இழுத்து வந்து தன்னுள்ளே புகுத்திக் கொண்டாள்.

''இங்கேதான் - உன்னோடுதான் - உனக்காகத்தான் இருக்கிறேன், பார்வதி'' என்று சொல்லி அவளுடைய கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள் மனோன்மணி.

நீரெல்லாம் கொட்டிப்போய் வெறும் நுரைமட்டும் நிறைந்திருக்கும் பாத்திரமாகத் தோன்றிற்று அந்தப் பதிலும் செயலும் பார்வதிக்கு.

''உடல் இங்கேதான் இருக்கிறது, மனோ. உள்ளம்...'' முடிக்காமல் முறித்தாள் தன் பேச்சை, பார்வதி.

''உடலே இல்லாமல் உள்ளம் மட்டும் ஊர்சுற்றுகிறது, என்கிறாயா?''

கேலியைக் கேள்வியாக்கினால் அதனால் விளையும் கேடுகள் வலிவுள்ளவை என்பதை மறந்து கூறினாள் மனோன்மணி.

''கை இல்லாவிட்டால் கவளம் இல்லை என்பது உண்மைதான், மனோ. ஆனால்... பசிக்கிற வயிறுக்கு கவளம் முக்கியமே தவிர கை முக்கியமல்ல.''

தன் அண்ணனால் மரத்துப் போயிருந்தாள் மனோன்மணி. அந்தத் தோழி அவளை மலைத்துப் போகவும் செய்துவிட்டாள்.

''கையை வாயை ஏமாற்றாது, பார்வதி'' என்று துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவளைக் கட்டித் தழுவிக் கொண்டாள் மனோன்மணி.

மயக்கம் எப்போதும் தனிமையைத்தான் நாடும். மகிழ்ச்சியால் மட்டும் தனக்கொரு துணையில்லாமல் இருக்க முடிவதில்லை. ஒரு பெண் தன் கணவனோடு காதல் ததும்பப் பேசிக் கொண்டிருக்கும்போது தான் பெற்றெடுத்த குழந்தைகளைக் கூட அருகே இருக்க அனுமதிக்கமாட்டாள். அதே பெண் ஈன்றெடுத்த குழந்தையை எடுத்துக்

கொஞ்சும்போது தன் உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்ள எவராது வருவார்களா என்று தேடுவாள்.

அன்றாடம் அவளை ஆயிரம் தடவைகள் சந்திக்கத் தவறாத மனோன்மணியின் அண்ணன் இரண்டு நாட்களாக அவளைத் திரும்பியே பார்க்கவில்லை. இதுமட்டும் அவளுக்கு வருத்தத்தைத் தரவில்லை. துணையாகக் கிடைத்த அந்தத் தோழியோடு தான் இருக்கும்போது தன் அண்ணன் பார்த்துப் பாராட்டவில்லையே என்ற ஏக்கம் அவளை எரித்தது. ஒருவேளை பார்வதி அங்கே இருப்பதை அவன் விரும்பவில்லையோ? புயலைக் கிளப்பும் இந்த எண்ணம் அவள் மூளைக்குள் எழுந்தபோது இதயம் வேரற்றுக் கீழே விழுவதை உணர்ந்தாள்.

அன்று இரவு பார்வதி படுத்துறங்கும் வரை காத்திருந்தாள் மனோன்மணி. அந்த நேரத்தில் அவளுடைய அண்ணன் எதையாவது படித்துக் கொண்டிருப்பான் என்பது அவளுக்குத் தெரியும். எழுந்து அவன் அறையை நோக்கி மாடிக்குச் சென்றாள்.

''அண்ணா!'' கதவின் அருகில் நின்றுகொண்டே குரல் கொடுத்தாள் மனோன்மணி.

திரும்பிப் பார்த்த வாசு திகைத்துப்போனான்.

''ஏன் அங்கேயே நிற்கிறாய், மனோ? உள்ளே வா!'' என்று தெளிவு பெறாத நிலையிலேயே அவளை அழைத்தான் வாசு.

''வேண்டாம் அண்ணா. நான் இங்கேயே நிற்கிறேன். இங்கிருந்தபடியே பேசுவோம்.''

''என்ன நேர்ந்துவிட்டது உனக்கு?''

''இரண்டு நாட்களுக்கு முன்னால் இந்த வீட்டில் எல்லா இடங்களிலும் என்னால் இருக்க முடிந்தது. இப்போது நான் எங்கேயோதான் இருக்கும்படி ஆகிவிட்டது.''

அதற்குமேல் வாசுவால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து தன் தங்கையின் அருகில் வந்தான். கலங்கியிருந்த மனோன்மணியின் கண்கள் எங்கே நீரைக் கக்கிவிடப் போகின்றனவோ என்ற கவலை வேறு அவனுக்கு ஏற்பட்டது.

''உன்னால் இந்த வீட்டில் இருக்க முடியவில்லை என்றால் என்னாலும் முடியாது, மனோ. இருவருமே வேறெங்காவது வீடு வாங்கிக் கொண்டு இதை யாருக்காவது விற்று விடுவோம்.''

வாசுவின் இந்தப் பதில் மனோன்மணியின் சினத்தை ஓரளவுதான் தணித்தது.

''இரண்டு நாட்களாக நீ ஏன் என்னை வந்து பார்க்கவில்லை?'' என்று அவனைப் பார்த்து அவள் கேட்டபோது ஓரிரு கண்ணீர்த் துளிகள் கீழே விழுந்தன.

''இல்லை, மனோ. வருத்தப்படாதே. எனக்கு வேலை நிறைய இருந்தது.''

''பொய். எதற்காக என்னிடம் பொய் சொல்லுகிறாய், அண்ணா? என்னைப் பார்க்காவிட்டால் உன்னால்தான் ஒரு வேலையும் செய்ய முடியாதே.''

அவள் அவனுடைய பேச்சைத் துண்டிக்கவில்லை. அவனுடைய நாக்கையே துண்டித்துவிட்டாள். எப்படிச் சமாளிப்பது என்பது புரியாமல் ஏதாவது சமாதானத்தைத் தேடுவதில் ஈடுபட்டான் வாசு.

''பார்வதி இங்கே இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா, அண்ணா? அதனால்தான் நான் இருக்கும் இடத்துக்குக்கூட நீ வருவதில்லையா?''

பளிச்சென்று வீசுகிற ஒளி பூச்சிகளை இருளை நோக்கித் துரத்துவதுபோல மனோன்மணியின் இந்தக் கேள்வி வாசுவை நிலைமாறச் செய்தது. எதையும் அவளிடம் மறைக்காமல் பழகி வந்த அவனுக்கு அவளை மறுத்துப் பேச மனம் வரவில்லை.

''ஆமாம், மனோ. உண்மைதான். அவளை வேறெங்காவது அனுப்பிவிடு. செலவுக்கென்று ஏதாவது கொடுத்து விடலாம்.''

''நான் அவளைக் கடையிலிருந்து வாங்கி வரவில்லை, அண்ணா. வாழ்வு தர அழைத்து வந்தேன். தயவு செய்து இதை ஒரு பணப்பிரச்னை ஆக்கிவிடாதே. இது ஒரு மனப்பிரச்னை.''

''என்னைவிட அவள்தான் முக்கியம் என்று உன் மனம் நினைத்தால் நீ செய்யும் எதற்கும் நான் குறுக்கே நிற்க மாட்டேன். எனக்கிருக்கிற உரிமை உனக்கும் இந்த வீட்டில் இருக்கிறது. ஆனால்...'' எப்படி முடிப்பது என்று சிந்திப்பவன்போலத் தன் பேச்சை நிறுத்தினான் வாசு.

வரவழைத்துக்கொண்டு வந்திருந்த எதிர்ப்புணர்வை வாசுவின் பதில் புறமுதுகிட்டோடச் செய்துவிட்டதால் வலிவிழந்து தவித்தாள் மனோன்மணி. தன் அண்ணனின் பேச்சின் தொடர்ச்சியை ஆவலோடு எதிர்பார்த்தாள்.

"என்னுடைய ஒத்துழைப்பை மட்டும் எதிர்பார்க்காதே!"

அதற்குமேல் மேல் வளருவது மனோன்மணிக்குப் பிடிக்கவில்லை. மௌனமாக மாடியைவிட்டு இறங்கினாள். தன் அண்ணனின் பார்வை தன்னைத் தொடருகிறது என்ற உணர்வு அவளிடம் இருந்தது. திரும்பிப் பார்க்க மட்டும் அவளுக்கு மனம் வரவில்லை. தன் அறைக்குள் நுழைந்ததும் அயர்ந்துறங்கும் பார்வதியை அனுதாபத்தோடு பார்த்துவிட்டு அவளருகில் படுத்து அசைவற்றுக் கிடந்தாள்.

வேலையற்றுப்போன விழிகள் அவளுடைய அறைக்குள்ளேயே அலைந்தன. முரண்பட்ட மறுமுனையாக முன்னேறிவிட்ட சிறிய முள்ளைக் கீழே தள்ளப்பட்டதால் பள்ளத்தில் விழுந்த பெரிய முள் பரிதாபமாகப் பார்த்தது. தெளிவான கருத்துக்களைக் கனமான அட்டைகள் தங்களுக்குள் பதுக்கி வைத்திருக்கின்றன என்பதை உணர்த்தின. அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள். இடைவெளிவிட்டுப் பிரிந்திருப்பவை இயங்குவதால்தான் இணைந்தவையாகத் தோன்றுகின்றன என்பதை அறிவுறுத்திற்று சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறி.

உறக்கம் தன்னை அவள் அழைப்பாள் என்று எதிர்பார்த்து நீண்டநேரம் காத்து நின்றது. அதைத் திரும்பிப் பார்க்கக்கூட மனோன்மணிக்கு மனம் வரவில்லை. பிறக்கும்போதே செத்துப்போகும் சிந்தனைகளின் பிணங்களை வரிசையாக அடுக்கிக் கொண்டிருந்தாள்.

விடிந்து எழுந்ததும் சிவப்பேறிய விழிகளோடு தன்னைப் பார்த்து இதழ் விரித்த அந்தத் தோழியைக் கலவரத்தோடு நோக்கினாள் பார்வதி.

# 2

சிந்தனைகள்...! வளரும் மனித ஜாதி தன் வாழ்வை எளிதாகவும் வலிவாகவும் ஆக்கிக் கொள்ள அதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள்! தேங்கி நிற்கும் நீரின் அமைப்புக்கும் அளவுக்கும் தகுந்தாற்போலத்தான் அதில் எழும் அலைகளின் வேகமும் விறுவிறுப்பும் அமைகின்றன. அதேபோலத்தான் சிந்தனைகளும்! தேக்கி வைக்கப்பட்டிருக்கும் விவரங்களுக்கும் விளக்கங்களுக்கும் ஏற்றவாறுதான் எந்த மூளையிலும் சிந்தனைகள் வளரும்; பிறகு எண்ணங்களாக மலரும். நேர்மாறான முடிவுகளோடு ஒருவரோடொருவர் போராடுகிற ஒரு கூட்டத்தை இந்த வையகம் மனிதர்களாகப் பெற்றிருப்பதற்கு இதுவே காரணம்.

அனுபவத்தின் ஆரம்பப் பாடத்தை மனோன்மணி படித்துக் கொண்டிருந்தாள். அதனால் அவளுடைய மனோ நிலையில் ஒரு மாறுதலே ஏற்பட்டிருந்தது. பச்சைக் குழந்தையாக இருந்த அவளுடைய உள்ளம் திடீரெனப் பருவமடைந்து பக்குவமும் பெற்றுச் சிக்கல் நிறைந்த விஷயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. எதிர்பாராது உருவான பார்வதியின் பிரச்னை அவளை எங்கெங்கோ அலையச் செய்தது.

இணைந்த தோழிகள் - இன்முகங்களால் மட்டும் இதயத் தொடர்பு கொண்டிருந்த உறவினர்கள் - என்றென்றும் பழகுபவர்கள் - எப்போதெப்போதோ சந்திப்பவர்கள் - ஒவ்வொரு வரிசையாக அத்தனை பேரையும் சந்தித்து அடைக்கலங் கேட்பதே அவளுடைய அன்றாட வேலையாக இருந்தது. அனைவரும் அவளுடைய வேண்டுகோளை அவள் சொல்லி முடிக்கும்வரை அனுதாபத்தோடு கேட்டார்கள். எல்லா இடங்களிலும் உண்டு முடித்தபிறகு எடுத்தெறியும் இலையைப்போல்

அவள் அனுப்பப்பட்டாள். ''உனக்கேன் அம்மா தேவையில்லாத இந்தத் தொல்லை?'' என்று சொல்லி அவளைக் குத்திக் கொன்றவர்களும் உண்டு; ''வைத்துக் காப்பாற்றுகிற சக்தி உனக்கே இருக்கும்போதே வாடகை கொடுத்து ஏன் ஆள் தேடுகிறாய்?'' என்று கூறி அவளை வெட்டித் துண்டாடியவர்களும் உண்டு.

வேதனையால் மனோன்மணி விழுங்கப்பட்டாள். தோழியாக அழைத்து வரப்பட்ட பார்வதியைச் சூழ்நிலை ஒரு தொல்லை ஆக்கிவிட்டது. இருப்பதற்கு ஒரு புகலிடந்தேடி அவளை அங்கே அனுப்பிவிட்டால் வாழ்வுக்கு வகை செய்து கொடுப்பதை அதன் தொடர்ச்சியாக வைத்துக்கொள்ளலாம். ஆனால்... அந்த இடம்... அது எங்கே இருக்கிறது?

கால்பந்தாட்டத்தில் குறுக்கிடுபவர்களுக்கு இடங் கொடுக்காமல் களம் முழுவதும் பந்தை உருட்டிச் செல்லுவதுபோல் தடைசெய்யும் முடிவுகளோடு மோதிக் கொள்ளாமல் நினைவுகளை மூளை முழுதும் விரட்டி ஓட்டிக் கொண்டிருந்தாள். இலக்கு எது என்பது அவளுக்கே புரியாததால் பந்துதான் அவளிடம் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தது.

தற்செயலாக அன்று பழைய செய்திப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தாள். அதில் தட்டுப்பட்ட ஒன்றை அவளுடைய நினைவுகள் தழுவிக் கொண்டன. அவளுடைய தூர உறவினர் ஒருவர் - எப்போதும் எல்லோருக்கும் அமைவதுபோலச் சுற்றி வளைத்துச் சுட்டிக் காட்டினால் மாமா என்ற முறையில் வருபவர் - பொதுத் தொண்டில் அவளுக்கு விவரந் தெரிந்த நாளிலிருந்து இருந்து வருபவர் - செய்தித் தாட்களில் தொடர்ந்து ஏதாவது ஒரு ஓரத்திலாவது இடத்தைப் பிடித்துக் கொள்ளுவோர் சிலரில் அவரும் ஒருவர் - அந்தப் பக்கம் எப்போதாவது வந்தால் அவர்கள் வீட்டுக்கு நுழையாமல் போகாதவர் - அவசரப்படாமல் ஆர அமரச் சிந்தித்திருந்தால் அவருடைய நினைவு அப்போதே ஏற்பட்டிருக்குமே என்று தன் மூளைக்கு அறிவுரை கூறினாள் மனோன்மணி.

அடுத்து அவள் செய்த காரியம் தன்னுடைய காரை அவருடைய மாளிகைக்கு ஓட்டி அதன் சுற்றுச் சுவர்களுக்குள் செலுத்தி அதன் வாயில்முன் நிறுத்தி இறங்கி உள்ளே நுழைந்ததுதான்.

நுழைவாயிலுக்கும் உட்புற முற்றத்துக்கும் இடையே உட்கார்ந்திருந்தவர்களும் இடமற்று நின்றவர்களுமாக மனிதர்கள் நிறைந்திருந்தனர். அவதியும் ஆவலும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு அவர்களுடைய விழிகளில் வீற்றிருந்தன. அசையக்கூட அச்சப்படுபவர்கள்போல அவர்களில் பலர் காணப்பட்டனர். உரத்துப்

பேசும் துணிவு அவர்களைவிட்டு ஓடிவிட்டதைப்போலத் தணிந்த குரலில் உரையாடிக் கொண்டிருந்தனர் ஒரு சிலர். அனைவரையும் கவருவதற்காகவே அங்கே வந்திருப்பவர்களைப்போல் எல்லோரும் உணரும்படி எதையாவது செய்து கொண்டிருந்தனர் ஓரிருவர். எட்டிப் பார்ப்பதும் இடத்துக்குத் திரும்புவதுமாக இயங்கிக் கொண்டிருந்தனர் சிலர்.

தயங்கித் தயங்கி அடியெடுத்து வைத்த மனோன்மணிக்கு அவள் உள்ளே நுழைந்தது முதல் அவர்களைக் கடந்ததுவரை எல்லா விழிகளும் அவளை வரவேற்று வழியனுப்பி வைத்தது என்னவோ போலிருந்தது.

''வா, அம்மா, மனோன்மணி!'' என்று அவளை வரவேற்று உபசரித்தார் அவர்.

வணக்கம் தெரிவித்துவிட்டு அவர் முன்போய் அமர்ந்தாள் மனோன்மணி. குடும்பத்தைப் பற்றிய விசாரணைகள் முடித்தபிறகு அவரே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். இறந்த கால நிகழ்ச்சிகள் எல்லாம் மறந்துபோகாமலிருக்க மறுபடியும் நினைவுபடுத்திப் பார்ப்பதுபோல மனோன்மணிக்குத் தோன்றியது. அவருடைய புகழ் - பெருமை - சாதனைகள் அனைத்தையும் அவளுக்குத் தெரிவித்தார். வாய்ப்பு தனக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டது மனோன்மணிக்கு. இறுதியில் தனக்கு வேலை இருக்கிறது என்று கூறி எழுந்தார் அவர். அதற்கு மேலும் அவளால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் போனதால் மனோன்மணி பேசத் தொடங்கினாள். நிறுத்தி நிதானமாக ஒவ்வொன்றையும் வரிசைப்படுத்தித் தன் வருகையின் நோக்கத்தை அவரிடம் தெரிவித்தாள் அவள்.

''நாளைக்கு வா அம்மா. கட்டாயம் கவனிக்கிறேன்,'' என்றார் அவர்.

நம்பிக்கையோடு வீடு திரும்பினாள் மனோன்மணி. தன் இதயம் தோகை விரித்தாடுவது போலிருந்தது அவளுக்கு.

வீட்டுக்குள் நுழைந்ததும் விசை கொடுக்கப்பட்ட பொம்மைபோல வாசுவின் அறைக்கு ஓடினாள்.

''அவளுக்கு ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன், அண்ணா''

அவளைக் குறும்பாகப் பார்த்தான் வாசு.

''என்ன அண்ணா, அப்படிப் பார்க்கிறாய்?'' என்று அலட்சியப்படுத்தப்பட்டவள்போல அவனைக் கேட்டாள்.

''செய்ததைச் சொல்லாமல் அதைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்கிறாயே!''

அதுவரை தான் செய்திருப்பதை அப்படியே சொல்லி முடித்தாள். வாசு வாய்விட்டுச் சிரித்தது அவளை வம்புக்கிழுப்பது போலிருந்தது.

''உனக்கு எப்போதுமே கேலிதான்!'' என்று கூறி வரமறுத்த கோபத்தைப் பிடித்திழுத்தாள் மனோன்மணி.

''அவரை நம்புகிறாயா?''

''உன்னையுந்தான் நம்ப முடியவில்லை.''

''பைத்தியமே! பொதுத்தொண்டு இப்போது ஒரு தொழிலாகி விட்டது. வாடிக்கைக்காரர்களிடம் அடிக்கடி பேசிப் பழக்கப்பட்டவர் அவர். உன்னிடமும் பேசி இருக்கிறார்!''

''என்மேல் உனக்குள்ள கோபம் எல்லோரையும் குறை சொல்ல வைக்கிறது'' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் போனாள் மனோன்மணி.

வளர்த்துவிட்ட புறா சுற்றிலும் பறந்துகாட்டுவதைப் பார்ப்பதுபோல நடந்து செல்லும் அவளைப் பார்த்தான் வாசு.

அறைக்குள் நுழைந்த மனோன்மணி பார்வதியை அணைத்து அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தாள்.

அன்று முழுதும் பார்வதி மனோன்மணியை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனோன்மணியைப் பற்றி இரண்டு முடிவுகளுக்குள் வந்திருந்தாள். ஒன்று, வீட்டில் இருப்பது என்பது அவளுக்கு ஒரு இடைவேளைதான் என்பது; இரண்டாவது, அடிக்கடி கடிகாரத்திலேயே ஆழ்ந்துபோய் அதைப்பற்றி ஏதோ ஒரு ஆராய்ச்சி செய்து வருபவள் என்பது. அந்த இரண்டிலிருந்தும் அவள் முரண்பட்டதுதான் அன்று முழுதும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''நீ இன்று அடிக்கடி ஆவலோடு பார்க்கும் அந்தத் தேதித் தாளை நாளைக் காலையில் நீ காலண்டரிலிருந்து கிழித்தெறியப் போகிறாய், மனோ'' என்று அன்றாட வாழ்வில் தோன்றும் வேதாந்த தத்துவத்தைக் கூறுவதைப் போல மனோன்மணியிடம் சொன்னாள் பார்வதி.

''அது எப்படியாவது கிழிந்துவிடாதா என்றுதானே ஆவலோடு எதிர்பார்க்கிறேன்'' என்றாள் மனோன்மணி.

மூன்றாவது முரண்பாட்டைக் கண்டுபிடித்து விட்டவள்போல முறுவலித்தாள் பார்வதி. விடிந்து விழித்தாலும் படுக்கையிலிருந்து எழுந்து இயங்காத மனோன்மணி மறுநாள் காலையில் விடிவதற்கு முன்னதாகவே எழுந்து எங்கேயோ புறப்பட ஆயத்தங்கள் செய்தது பார்வதிக்குப் புதிய முரண்பாடாகத் தோன்றியது.

''கடிகாரம் ஓடுமுன் ஓடு'' என்று அப்போது நினைவுக்கு வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதை அடிகளை முணுமுணுத்துக் கொண்டே காரை ஓட்டினாள் மனோன்மணி.

காலை அரும்பியிருந்தது. நீண்ட இருளில் நிம்மதி பெற்ற உலகம் புகுந்த ஒளியால் புத்துணர்ச்சி பெற்றிருந்தது. கழுவப்பட்ட முகத்தோடும் கலைக்கப்பட்ட கோலத்தோடும் வீடுகளுக்கு முன் நீர்தெளித்து கலையப் போகும் கோலத்தால் கவர்ச்சி உண்டாக்கிக் கொண்டிருந்தனர் இளம் பெண்கள். எதிரே பசுவை நிறுத்திக் கறக்கப்படும் பாலைக் கண்காணித்துக் கொண்டு நின்றனர் வயதான பெண்கள். கடைகளில் தொங்கவிடப்பட்டிருந்த செய்தித்தலைப்புகளை மட்டும் படித்துவிட்டு உலகின் வளர்ச்சியை உணர்ந்துகொண்டவர்கள் அங்கேயே நின்றுகொண்டு அரசியலை அலசிக் கொண்டிருந்தனர். உணவுக் கடைகளில் உள்ளே நுழைவோரும் வெளியே வருவோரும் யாருக்கு யார் ஒதுங்கி இடங்கொடுப்பது என்பது விளங்காமல் தவித்தனர். வானொலிப் பெட்டிகள் வாய் கிழியக் கத்திக் கொண்டிருந்தன. குப்பைகளைக் கூட்டித் தெருவோரங்களில் குவித்துச் செல்வோரும் அவற்றை எடுத்துச் செல்வோரும் சுறுசுறுப்பாக இயங்கினர்.

அவளுடைய மாமா ஆழ்ந்த துயிலில் இருந்தார். சுவரில் இருந்த படங்களையெல்லாம் பார்த்து முடித்தாள் மனோன்மணி. அதற்குப் பிறகு என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. வெளியிலிருந்து வீசி எறியப்பட்ட பத்திரிகைகள் உள்ளே வந்து விழுந்தன. ஒவ்வொரு பத்திரிகையாக எடுத்துத் தலைப்புகளில் மேய்ந்தாள். நேரம் நகர மறுத்தது. பக்கம் பக்கமாகச் செய்திகளை மனப்பாடம் செய்து முடித்தாள். ஓடிய கடிகாரத்தால்கூட நேரத்தை விரட்டி ஓட்ட முடியவில்லை. விலைமதிப்புள்ள பொருள்கள் பல விற்பனைக்குத் தவிப்பதை விளம்பரங்கள் மூலம் தெரிந்துகொண்டாள். அன்று மட்டும் அவளை அழைத்து வானொலியில் செய்தி விமரிசனம் செய்யச் சொல்லியிருந்தால் அங்காடி நிலவரத்திலிருந்து ஆரூடப் பகுதிவரை அனைவருக்கும் அத்துப்படி ஆகியிருக்கும்.

''அப்போதே வந்துவிட்டாயா, மனோன்மணி.''

''இல்லை. இப்போதுதான்...'' என்று இழுத்து நிறுத்திவிட்டு அவள் எழுந்து நின்றாள்.

''நேற்று நீ என்னவோ சொன்னாயே, அம்மா. அதற்குள் மறந்துவிட்டேன்.''

சோற்றைப் பரிமாறிவிட்டுக் குழம்பெடுக்க வந்த பெண் அது கொட்டிப் போயிருப்பதைக் காண நேர்ந்தால்...? தடுமாற்றத்தைத் தடுத்துக் கொண்டாள் மனோன்மணி. அவர் மறந்ததை அவள் நினைவுபடுத்தினாள்.

''நான் சொல்லுகிறேன் என்று நீ வருத்தப்படக்கூடாது மனோ. இந்தக் காலத்து இளம்பெண்கள் இதே மாதிரித் தவறுகளைத்தான் ஏராளமாகச் செய்கிறார்கள். உன் வயதுக்கேற்ற உணர்ச்சிகள்தானம்மா இவை எல்லாம். ஆனால் அறிவுக்கேற்றபடி அவற்றைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சிகளை யாரும் உண்டாக்கிக் கொள்ளுவதில்லை; நம்மைச் சுற்றி நடப்பவைகளால் உண்டாக்கப்படுகின்றன.''

இந்த முன்னுரைக்கு எது முடிவுரையாக அமையும் என்பது மனோன்மணிக்குத் தெரியும். உட்கார்ந்திருக்கும் நாற்காலி உடைந்து விழுவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது அவளுக்கு. அந்தப் பேச்சின் தொடர்ச்சி எப்படியாவது எதிர்பாராத விதமாக அமைந்துவிடாதா என்ற ஆசை அவளை அமைதி குலையாமல் தடுத்தது.

''என்னுடைய வீட்டில் அவளுக்கு இடந் தந்தால் என்னைச் சந்தேகப்படுவார்கள்; வேறு எவருடைய வீட்டுக்காவது அனுப்பி வைத்தால் என்னோடு சண்டைக்கு வருவார்கள்.''

கடைசிப் பக்கத்தையும் படித்து முடித்துவிட்டுக் கீழே வைத்த கதைப் புத்தகத்தைப் பார்ப்பதுபோல அவரைப் பார்த்தாள் மனோன்மணி.

''உனக்குச் சங்கடமாயிருந்தால் நான் உங்கள் வீட்டுக்கு வந்து அவளிடம் இதமாகச் சொல்லி அவளை அனுப்பி விடட்டுமா?''

மலரிருந்து இதழைக் கிள்ளி அதைக் கையில் வைத்துக் கசக்குவது போலிருந்தது மனோன்மணிக்கு இந்தப் பேச்சு.

''அந்த அளவுக்கு நீங்கள் தொல்லைப்பட வேண்டாம்,'' என்று கூறி வெளியேறினாள்.

காரில் ஏறி அவள் கதவைச் சாத்தியபோது ஓசை பலமாகக் கேட்டது. பக்கத்தில் எவனோ வாய்விட்டுச் சிரித்தான். அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''உன்னுடைய கோபம் எனக்குப் புரிகிறதம்மா. அவர் தனக்குத்தானே எல்லாவற்றையும் செய்துகொள்ளுவாரே தவிர எவருக்கும் எதையும் செய்வதில்லை.''

அனுதாபம் கலந்த அந்தச் சொற்களை அவளால் அலட்சியப்படுத்த முடியவில்லை.

''பிறகு ஏன் இத்தனை பேர் காத்திருக்கிறார்கள்?''

''அதுதான் நம்முடைய மக்களிடமுள்ள கோளாறு. ஏதோ ஒரு நோக்கத்தில் சிலரைக் கடவுளாக்கிவிட்டு அவர்களுடைய பக்தர்களாகி விடுகிறார்கள்; பிறகு அவர்கள் ஆட்டிவைப்பதை எல்லாம் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.''

''அவர்களை எப்படித் திருத்துவது?''

''முட்டி மோதி மண்டை உடைந்து இரத்தம் வழியும்போதுதான் புத்தி வரும். அதுவரை எதுவும் செய்ய முடியாது. நீ இப்போது ஏதாவது சொன்னால் ஏமாற்றுபவனுக்கு எதுவும் ஏற்படாது; ஏமாறுபவன்தான் எதிரியாவான். பாத்திரத்தைச் சூடேற்றினால் பால்தானே பொங்கி வழிகிறது?''

மறையாத ஒளியாக மதிக்கப்பட்ட அவளுடைய அந்த உறவினர் மங்கிய நிழலாகத் தோன்றினார் மனோன்மணிக்கு அப்போது. கார் ஓடத் தொடங்கியது. எங்கே போவது? அவளுக்கே புரியவில்லை. வீட்டுக்குப் போனால் வாசு பரிகாசம் செய்வான். போகாவிட்டால்...?

உச்சிக்கு வரும் ஒரே காரணத்தால் உலகை உருக்கிக் காய்ச்சும் கதிரவன் உலகம் அவனுடைய வெப்பம் தாங்காது உருவழிவதைக் கண்டும் கருணை காட்டுவதில்லை. வளரும்போதும் தளரும்போதும் அவனால் உருவாகும் நிழலின் நீளத்தைக்கூட அவனுக்கு வாழ்வு கிடைக்கும்போது குறைத்துக்கொண்டு ஒதுங்கக்கூட எவருக்கும் இடங் கிடைக்காமல் தடுத்துவிடுகிறான். அதனால்தான் அவனுடைய வருகைக்காகக் காத்திருக்கும் வையகம் அவன் வாகை சூடி அவன்

வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும்போது, எப்போது மறையப் போகிறான் என்பதை எதிர்பார்த்துத் தவியாய்த் தவிக்கிறது.

என்றும்போல அன்றும் அவனுக்கு வாழ்வு கிடைத்த அந்த நேரத்தில் இதயத்தை இழந்துவிட்டு உலகத்தை எரித்துக் கொண்டிருந்தான் கதிரவன். தாளிடப்பட்ட வீடுகளின் கதவுகள் வெப்பம் உள்ளே தலைகாட்டாமல் தடுக்க முயற்சித்தன. ஒண்டுவதற்குக்கூட இடங்கிடைக்காமல் தெருவோரத்தில் நின்று கொண்டிருந்த மாடுகள் திண்டாடின. வகுத்துக் கொள்ளுவதற்கென்று எந்தவித வரையறையும் இல்லாதவர்களுடைய வாழ்க்கை எப்படி அமையும் என்பதற்கான எடுத்துக்காட்டுகளாய் அலையும் நாய்களைக்கூட அப்போது காணோம்.

காயும் வெயில்கூடக் கலக்கத்தை உண்டாக்கவில்லை மனோன்மணிக்கு. ஓய்வையும் உறக்கத்தையும் ஒதுக்கிவிட்டு அலைந்தும் ஒருபயனும் காணமுடியவில்லையே என்ற எண்ணந்தான் அவளிடம் எரிச்சலை உண்டாக்கிற்று. விரும்பி வரவேற்காத நேரங்களில்கூட விதையோடும் உரத்தோடும் வீடு தேடிவந்து தன்னை நம்மிடம் வளர்த்துக் கொள்ளுபவை பலவற்றில் வேதனைதான் முதலிடம் பெறுகிறது என்ற உண்மை அப்போதுதான் அவளுக்குப் புரியத் தொடங்கியது.

பாதி அளவுகூடக் குடிக்காமல் சோடா பாட்டிலையும் பணத்தையும் கடைக்காரனிடம் மனோன்மணி கொடுத்தபோது கையைக் கவனிக்க வேண்டிய அவன் அவள் முகத்தை ஆராயத் தொடங்கினான். அவள் ஓட்டிவந்த காரும் அவளுடைய உடலில் இழைக்கப்பட்டிருந்த ஒளி வீசும் நகைகளும் எழில் நிறைந்த அந்த மேனிக்கு ஈடுகொடுத்த பட்டாடைகளும் அவனுக்கும் அவளுக்கும் இடையே இருந்த வயது வேற்றுமையைச் சரிக்கட்டி விட்டதால் அவளிடம் அவனுக்கு ஒரு மரியாதை உருவானது.

''சரியாகக்கூடக் குடிக்கவில்லையே, அம்மா,'' என்று பரிவோடு அவளிடம் கூறினான் அவன்.

குறை அந்தப் பெண்ணிடம் இருக்கிறதா அல்லது தான் கொடுத்த சோடாவில் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல்கூட அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

பதிலேதும் சொல்லாமல் அந்தத் தெருவைப் பார்வையால் அளந்து பார்த்தாள் மனோன்மணி.

''பெண்களுக்கு ஏக்கம் உண்டானால் அவர்களுக்கு ஏற்படும் பசி தாகங்களைக்கூடப் பரிதவிக்கச் செய்கின்றனர்.''

இப்படிப் பொருள்படும்படி எதையோ கூறிவிட்டு அதுவரை ஒதுக்கி வைத்திருந்த உறக்கத்தோடு உறவாடத் தொடங்கினான் அந்தக் கடைக்காரன்.

ஏதோ வாங்க வந்த ஒருவன் அந்தக் கடைக்காரனை எழுப்பி விட்டான். விழித்துக் கொண்ட கடைக்காரன் வந்தவனைத் திரும்பிகூடப் பார்க்காமல் நின்றவளையே ஆச்சரியத்தோடு நோக்கினான். அந்தப் புதிய மனிதனால் அந்த அலட்சியத்தைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

''வயதான காலத்தில் வாலிபம் திரும்புகிறதோ?'' என்றான் அவன்.

திடுக்கிட்டுத் திரும்பிய மனோன்மணிக்கு அடிபட்டு விழுந்த மரியாதை அவதி தாங்காது துடிப்பது தெரிந்தது.

''ஏன் அம்மா, இன்னமுமா இங்கேயே நிற்கிறாய்?''

அனுதாபமா அல்லது அருவெறுப்பா? எதையும் எடைபோட்டு நிர்ணயிக்கும் உணர்வையே இழந்துவிட்டாள் மனோன்மணி. பாதையை நிர்ணயிக்கும் உரிமையைத் தன் பாதங்களுக்கு அளித்துவிட்டு அவற்றின் போக்குக்குத் தன் உள்ளத்தைத் தொடர விட்டாள். காரில் வந்த நினைவையும் உணர்வையும் அவளுடைய கால்கள் இழந்துவிட்டன.

மூளை கட்டுக் குலைந்ததால் அதில் நிறைந்திருந்த நிகழ்ச்சிகள் அவளுடைய நினைவுகளில் ஓடும் திரைப்படமாக ஆயின. எல்லோருடைய கவனங்களையும் தன்பால் திருப்பிக் கொண்டே அந்தத் தெருவில் நடக்கிறாள் என்ற உணர்வே அவளைவிட்டு ஓடிவிட்டது. அவலமான ஒரு ஓலம் அதற்கேற்றபடி காட்சிகளை அமைத்துக் கொண்டிருந்தது அவளுடைய மன அரங்கில்.

மழை பொழிவது போன்ற உணர்வை அவளுடைய உடல் பெற்றபோதுதான் மயக்கத்திலிருந்து விடுபட்டது அவளுடைய உள்ளம். திறந்த விழிகள் திகைத்துப் போயின. தெருவில் அந்தக் கடையருகே நின்று கொண்டிருந்த அவள் கூரை வேய்ந்த அந்தக் கட்டிடத்துக்குள் எப்படி வந்தாள் என்பது அவளுக்குப் புரியவில்லை. கையில் நீரை நிரப்பிக் கொண்டு அவளுடைய கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான் ஒருவன். நாலைந்து பேர் அவளைச் சூழ்ந்திருந்தனர். எழுந்து உட்கார்ந்து தன் முகத்தைத் துடைத்துக்கொண்டே மனோன்மணிக்கு என்னவோ போலிருந்தது.

காரில் வந்தது... அவளுடைய நினைவுக்கு வந்தது. பிறகு... சோடா குடித்தாள். அதற்குப் பிறகு... சிறிதுநேரம் அந்தக் கடையருகே நின்றாள். அதை அடுத்து...? நினைவுகளின் தடுமாற்றத்தில் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியை இழந்துவிட்டாள்.

''உடலை அலட்டிக் கொள்ளாதீர்கள். சிறிது நேரம் படுத்திருந்தே ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.''

அந்தச் சொற்கள் அளித்த ஆறுதலைவிட அவற்றை ஏந்தி வந்த குரலின் கனிவுதான் கொதிப்படைந்திருந்த அவளுடைய உள்ளத்தில் குளிர்நீரைக் கொட்டி வெப்பத்தைத் தணித்தது. பரிவைப் பரிசாகத் தரும் அங்கிருந்த அனைவரையும் பார்த்தாள்.

''நீங்கள் யார் அம்மா? எங்கே வசிக்கிறீர்கள்?''

நிமிர்ந்து பார்த்தாள். நெஞ்சில் நிலைக்கக்கூடிய உருவம் ஒன்று அவளை நேருக்கு நேர் பார்த்தது. அந்தக் கேள்வி அவளுக்குப் பிடிக்கவில்லை; அந்தப் பார்வை அவளைப் பற்றிக் கொண்டது.

''நான் இங்கு எப்படி வந்தேன்? இது யாருடைய வீடு?'' - என்று கேட்டு சந்தேகம் போக்கப்பட்டதால்தான் சங்கோஜம் நீங்கும் என்பதை உணர்த்தினாள்.

''நீங்கள் பாதையில் மயங்கிக் கிடந்தீர்கள். நாங்கள் தூக்கிவந்து தெளிவுண்டாக்கினோம். இது அனாதைப் பெண்களை ஆதரித்து நடத்தப்படும் ஒரு ஆசிரமம்.''

ஈன்றெடுத்த தாயைக் கண்டதும் கையிலிருக்கும் இனிப்புப் பண்டத்தைக்கூட வீசியெறிந்துவிட்டு எகிறித் துள்ளும் குழந்தையைப் போலானது மனோன்மணியின் மனோநிலை.

''அனாதையான பெண் யாராவது இப்போது சேர விரும்பினால் அவளைச் சேர்த்துக் கொள்ளுவீர்களா?''

அவதிப்பட்டவர்களால் எதையும் அடக்கிவைக்க முடிவதில்லை என்பதை அவசரப்பட்டு அவள் கேட்ட இந்தக் கேள்வி அவளுக்கே உணர்த்திற்று.

''உங்களையா அனாதை என்கிறீர்கள்?''

மனக்கிளர்ச்சிக்குரிய சந்தேகம் ஒன்று அவன் குரலில் தன் சாயலைக் காட்டிவிட்டு மறைந்தது. தனக்கும் வெட்கம் ஏற்படும் என்பதை அப்போதுதான் புரிந்துகொண்டாள் மனோன்மணி.

"இல்லை, இல்லை. என்னைச் சேர்த்துக் கொள்ளச் சொல்லவில்லை. இந்த ஆசிரமத்தை நடத்துபவர்கள் யார்?"

"நான்தான்! என் பெயர் மணிவண்ணன்."

"நீங்கள்தானா? தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களையே நேரிடையாகக் கேட்டுவிட்டேன்."

"பரவாயில்லை. சொல்லுங்கள்."

இதயத்துக்கு இதயம் உணரக்கூடிய விஷயங்களை எல்லோரையும் வைத்துக்கொண்டு அவன் கேட்பது மனோன்மணிக்கு என்னவோ போலிருந்தது. இரக்கத்துக்குரியவளாகத் தன் தோழியை எவரும் மதிக்க அவளால் இடங் கொடுக்க முடியவில்லை. அவன் அதைப் புரிந்துகொண்டான்.

"என் அறைக்கு வாருங்களேன். சாவகாசமாகப் பேசலாம்."

"அதுதான் சரி. என்னாலும் நிதானமாகச் சொல்ல முடியும்; உங்களாலும் பொறுமையாகக் கேட்க முடியும்."

ஒழுங்கு உருவகப்படுத்தப்பட்டதைப்போலத் தோன்றிற்று அவர்கள் நுழைந்த அந்த அறை. பாதி அளவுக்குத்தான் சுவர் எழுப்பப்பட்டிருந்தது! மீதி பகுதியை குறுக்கும் நெடுக்குமாக இடைவெளிவிட்டு இணைக்கப்பட்ட மூங்கில் துண்டுகள் முழுமைப்படுத்தி இருந்தன. மேலே கருநீலமும் பூசப்பட்டிருந்தன. சமுதாயத்தை ஒரு குழந்தையாகப் பார்த்து அதற்கு வழி காட்டிச் சென்ற உத்தமர்களின் உருவங்கள் படங்களாக மாட்டப்பட்டிருந்தன. அலுத்துப்போகும் நேரங்களில் மூளை தனக்குத் தெம்பூட்டிக் கொள்ளத் தேடும் நிலைபெற்ற நூல்கள் ஒரு அலமாரியில் அடுக்கப்பட்டிருந்தன. சுற்றிலும் வெளியே வளர்க்கப்பட்டு பூத்திருந்த செடிகள் கொஞ்சுகிற காற்றோடு குலவிக் கொண்டிருந்தன.

பதிவு செய்யப்பட்டிருந்த பார்வதியின் கதையை மனோன்மணியின் உள்ளம் அவனிடம் ஒப்புவித்தது. முடிந்ததும் அவன் முகத்தைப் பார்த்தாள். அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்றாகத்தான் அவனுக்கு அது தோன்றியிருக்க வேண்டும். எந்தவித உணர்ச்சியும் அவனுக்கு ஏற்படவில்லை.

"இயங்குகிற இதயங்கள் எந்தவித இலக்கணத்துக்கும் உட்படுவதில்லை. அதனால்தான் அவற்றை எவராலும் புரிந்துகொள்ள

முடிவதில்லை. யாரையும் தவறாக எடை போடாதீர்கள்'' என்று சொல்லி அவளை அமைதியாகப் பார்த்தான் அவன்.

அவனுடைய பேச்சை விளங்கிக் கொள்ள முயற்சித்தாள் மனோன்மணி. தனக்குப் புரியாத ஒரு புதிய உலகத்தில் புகுந்திருந்ததால் அவளைக் குறுக்கிடும் ஒவ்வொன்றும் அவளுடைய சிந்தனைகளைத் தூண்டின; வாழ்வு அதுவரை பெட்டிக்குள் பூட்டிப் பாதுகாக்கப்பட்ட பொருளாக இருந்தது. தேவைப்படும்போது அதைத் திறந்து எதையும் எடுத்துக் கொள்ளுவாள். இப்போது அவளுடைய தேவைகள் தேடியலைய வேண்டியவையாக ஆகியிருக்கின்றன. ஒவ்வொன்றையும் திரையிட்டு மறைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு திரையாக அவள் விலக்கும்போது அங்கே காணப்படும் உண்மை அவளுடைய உள்ளத்தில் ஊடுருவிப் பாய்கிறது. தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இந்த உலகத்தில் ஏராளமாக இருந்தும் அவற்றைத் தெரிவிக்கும் ஆசிரியர்கள் மிகவும் குறைவாக இருப்பதால்தான் பலருக்கும் தெளிவுண்டாவதில்லை.

''ஊரெல்லாம் சுற்றியலைந்த பார்வதி இப்படி ஒரு இடமிருப்பதை ஏன்தான் தெரிந்து வைத்துக் கொள்வதில்லை என்பது எனக்குப் புரியவில்லை'' என்றாள் மனோ.

''இது ஊருக்குள் இல்லை. அதிலிருந்து பத்தாவது மைலில் இருக்கிறது,'' என்றான் அவன்.

''அப்படியானால்...?''

''நீங்கள் அத்தனை மைல்களும் நடந்து வந்ததால்தான் களைத்துப்போய் மயங்கி விழுந்திருக்கிறீர்கள்.''

பார்வதியை அந்த ஆசிரமத்தில் சேர்த்துவிட அவனிடம் உறுதி பெற்றுக்கொண்டு விடைபெற்றாள் மனோன்மணி. வீட்டுக்குத் திரும்பும்போது அவளிடம் ஒரே ஒரு முடிவுதான் உருவாகி இருந்தன.

'மண்ணில்தான் எல்லாம் விளைகின்றன; மாளிகைகளில் அல்ல' - என்பதுதான் அது.

திரைப்படக் கொட்டகையிலிருந்து இரண்டாவது ஆட்டம் முடிந்து வீடு திரும்பும் கூட்டம் படத்தில் பார்த்த அனைத்தையும் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டே நடந்தனர். மொக்குகளாகப் பறித்தெடுத்த மல்லிகையைச் சரமாகத் தொடுத்துக் கூந்தலில் சுற்றிக் கொண்டிருந்த மலர்ந்த தாமரைகளை அவற்றை மலரச் செய்வோர் மனக் கிளர்ச்சியோடு

பார்த்துச் சிரித்தனர். அயர்ந்த உறக்கத்துக்கும் அடிக்கடி ஏற்படும் விழிப்புகளுக்கும் ஆளாகும் முதியவர்கள் திண்ணைகளில் விரிக்கப்பட்ட பாய்களில் சுருண்டு கிடந்தனர். வீடுகளுக்கு உள்ளே எந்தவித வேலையுமற்ற மனிதர்கள் தெரு விளக்குகளின் கீழ் நின்று விவகாரங்களை வளர்த்துக் கொண்டிருந்தனர். உதிரிகளாகத் தெருக்களில் திரிவோர் உலகத்தோடு ஒட்ட முடியாமல் தவித்தனர். ஏதோ ஒன்றைக் கற்பனை செய்து கொண்டாவதுஅதைத் தொடர்ந்து ஓடினால்தான் தம்மால் காலங்கழிக்க முடியும் என்பதை உணர்த்தின நிற்பதும் ஓடுவதுமாக இருந்த நாய்கள். உடலை சாய்த்துப் படுக்க முடியாத ஆடுகளும் மாடுகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. ஆர்ப்பாட்டங்களை அடியோடு இழந்த உலகம் அமைதிக்கு அடிமைப்பட்டிருந்தது.

வீட்டுக்குத் திரும்பிய மனோன்மணி நடந்த எல்லாவற்றையும் தன் அண்ணனிடம் விளக்கமாகச் சொன்னாள்.

''வரவேற்க வேண்டிய காரியத்தைத்தான் செய்திருக்கிறாய் மனோ. என்னுடைய வாழ்த்துக்களை மறுத்துவிடாமல் ஏற்றுக்கொள்,'' என்றான் வாசு.

மனம் என்ற மலர் அமைதி குலையாமல் இதழ் விரிக்கும் போது எவருக்கும் எந்தச் சூழ்நிலையிலும் வெட்கம் ஏற்படும் என்பதற்கு இலக்கானாள் மனோன்மணி. அவனைப் பழித்துக் காட்டிவிட்டு அங்கிருந்து ஓடினாள்.

# 3

மனம் படைத்தவன்தான் மனிதன்; மனம் என்பது மாறுதல்களுக்கு இடங் கொடுப்பதால் தன்னை வளர்த்துக் கொள்ளுவது. மாற மறுக்கும் மனங்கள் மரத்துப்போன பிண்டங்கள்தாம். பரந்து விரிந்துவருகிற சமுதாயத்தில் அதில் இணைக்கப்பட்ட எல்லாப் பகுதிகளும் அதற்கேற்றாற்போலத் தம்மை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொள்ளாததால்தான் எத்தனையோ சமுதாயங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

பார்வதியின் பிரச்னை ஒருவகையாக முடிந்தது என்று மகிழ்ந்தான் வாசு. காலப்போக்கில் மனோன்மணியே ஒரு பிரச்னையாக மாறி வருவது கண்டு மனந் திகைத்தான்.

''இரவு முழுதும் கண்விழித்துப் படித்தால் உடம்பு என்ன ஆகும், மனோ?'' என்று ஒருநாள் கேட்டான் வாசு.

''அப்படிப் படித்தும் நேரம் போதவில்லையே!'' என்றாள் மனோன்மணி.

''உன்னுடைய அறிவு உடலைக் கெடுத்துக் கொள்ளச் சொல்லுகிறதா, மனோ?''

''இல்லை, அண்ணா. அறிவை வளர்த்துக்கொள்ள முயற்சிக்கும் போது, உடலும் ஒத்துழைக்க வேண்டாமா?''

சிந்தித்துச் சொல்லுபவை வாசுவின் சிரிப்புக்கு ஆளாகின்றனவே என்று தனக்குத்தானே நொந்துகொண்டாள் மனோன்மணி.

ஆசிரம வேலையையே தன் வாழ்வாக்கிக் கொண்டாள் மனோன்மணி. குறிக்கோள்கள் எல்லா உள்ளங்களிலும் விதைத்து வளர்க்கப்பட வேண்டியவையே தவிர எங்கேயோ தயாரித்து எல்லோருக்கும் விற்கப்படுபவை அல்ல என்ற தெளிவு அவளுக்கு ஏற்பட்டிருந்தது. உருவாக்கப்பட வேண்டியவை பற்றிய முழு அறிவைப் பெற அவள் பாடுபட்டாள். நடைபெற்றவையிலிருந்து நடைபெறுபவை வரை எல்லா நிகழ்ச்சிகளையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தினாள். குறுக்கிடுகிற ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்தாள். அன்றாடம் சந்திப்போர் அனைவரும் அவளுடைய சிந்தனைகளுக்கு உரியவர் ஆனார்கள். விதைகளைப் பற்றிய அறிவைவிட அவற்றை விதைக்கும் நிலத்தைப் பற்றிய அறிவுதான் நிரம்பத் தேவை என்பதைப் புரிந்துகொண்டாள்.

தான் ஏற்றுக்கொண்ட கடமைக்குக் களங்கம் ஏற்பட்டு விடுமோ என்று அச்சப்பட்டான் வாசு. பண்பை வளர்த்துக் கொள்ளுவதையும், ஒரு பணியாகவும் பயிற்சியாகவும் கொண்டிருந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவனாதலால் தன் தங்கை மனோன்மணியின் மனோநிலை முரண்படுவதைக் கண்டு ஆத்திரமோ அருவெறுப்போ அடையவில்லை அவன். அதை எப்படி வகைப்படுத்துவது என்பது ஒன்றையே சிந்தித்தான்.

ஒருநாள் மனோன்மணி ஆசிரமத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, 'மனோ!' என்று தன் அண்ணன் அழைப்பது கேட்டுத் திரும்பினாள். வழக்கமாகத் தன் அறையிலிருந்து கொண்டே குரல் கொடுக்கும் வாசு மாடிப்படி அருகே நின்று தன் தங்கையின் வருகைக்காகக் காத்திருந்தான். அந்த நிலைமாற்றமே அவளுக்கு ஒரு தண்டனையாகத் தெரிந்தது.

"உனக்கு ஏதாவது அவசரமான வேலை இருக்கிறதா, மனோ?" என்று தன் அறைக்குள் நுழைந்த அவளைக் கேட்டான் வாசு.

"ஏன் அண்ணா?" என்று கேட்டாள் மனோன்மணி.

"உன்னோடு சாவகாசமாக நான் பேச வேண்டி இருக்கிறது."

தன் அண்ணன் எப்போதிருந்து அன்னியன் ஆனான் என்பது புரியாமல் திகைத்தாள் மனோன்மணி.

"நீ கூட அனுமதி கேட்கிறாயே, அண்ணா."

"அந்த நிலைக்கு என்னை நீ ஆளாக்கிவிட்டாய், மனோ."

அந்த மாதிரி அவன் பேசுவது என்பது எப்போதும் அவளுக்கு அழுகையை அழைக்கும் குரலாகத்தான் இருக்கும். இப்போது அதற்கான அறிகுறிகளைத்தான் உருவாக்கிற்றே தவிர அதையே உண்டாக்கிவிடவில்லை. சரித்துவிட்ட பிறகு சமாளிக்க முயற்சிப்பது சங்கடத்தைத்தான் வளர்க்கும் என்று தோன்றியது மனோன்மணிக்கு. மௌனமாக வாசுவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''முன்பெல்லாம் எது செய்வதாக இருந்தாலும் என்னிடம் சொல்லிவிட்டுச் செய்வாய். இப்போது எல்லாவற்றையும் செய்துவிட்டுச் சொல்லுகிறாய்.''

பற்றிப் படர இடங்கொடுத்த செடியை அதைச் சுற்றி வளைத்த கொடி தன்னுடைய வசதிக்காக இறுக்கிப் பிணைத்து இன்னலுக்கு ஆளாக்குவது என்பது... அன்பு தனக்கேற்பட்டுள்ள அவல நிலையை அறிவித்தபோது அழுகையை வராமல் தடுக்க அவளால் முடியவில்லை.

''என்னை மன்னித்துக் கொள், அண்ணா'' என்று வாய்விட்டுக் கதறிவிட்டாள் மனோன்மணி.

எதற்காக அவளை அழைத்துப் பேசினோம் என்றாகிவிட்டது வாசுவுக்கு.

''அழாதே, மனோ. வேண்டுமானால் பார்வதியை நீ இங்கேயே அழைத்துக் கொள்ளலாம். உன் மனம் கோணாமல் நான் நடந்து கொள்ளுகிறேன்.''

அவனுடைய அந்த இசைவு மனோன்மணியின் முகத்தில் விளக்கேற்றி வைக்கும் என்று எதிர்பார்த்தான் வாசு. தீ திரியைப் பற்றாததால் எரிந்த தீக்குச்சிதான் அணைந்தது.

''பார்வதி ஒருத்தி மட்டும் பரிதாபத்துக்குரியவளாக இல்லை, அண்ணா,'' என்று தன் இலட்சியத்தின் வளர்ச்சியை தன் அண்ணனிடம் தெரிவித்தாள் மனோன்மணி.

''அதை நீ மட்டும் உணர்ந்து என்ன ஆகிவிடப் போகிறது?'' என்று கேட்டாள் வாசு.

''அதுதான், அண்ணா, எனக்கும் கவலையாக இருக்கிறது. பெரும்பாலான மக்கள் அதை உணரும் அளவுக்கு இன்னும் வளரவே இல்லை. சமுதாய அமைப்பு ஒரு பந்தய மைதானமாக ஆகிவிட்டது. எண்ணிக்கையில் வளர்ந்த பாமர மக்கள் அதில் குதிரைகளாக ஓடிக் கொண்டிருக்கின்றனர். படித்தவர்கள் அவர்களைக் குதிரைகளாகவே

வளர்த்து விடுவதில் தங்கள் அறிவைச் செலவழிக்கிறார்கள். பணக்காரர்கள் அவற்றின் மேல் பணங்கட்டிச் சூதாடுகிறார்கள். குதிரைகளுக்கு எதுவும் புரிவதில்லை, அண்ணா.''

ஏதோ ஒரு சிக்கலான பிரச்னையை அவள் எடுத்து விளக்கியுங்கூட எதிரே விளையாடும் சிறு குழந்தையைப் பார்த்து மகிழுவது போலத் தன்னை வாசு பார்த்தது மனோன்மணிக்கு என்னவோ போலிருந்தது.

''என்ன அண்ணா என்னை அப்படிப் பார்க்கிறாய்?'' என்று கேட்டாள் அவள்.

''இல்லை, மனோ. உனக்கேற்பட்டுள்ள புதிய பொறுப்புகளைப் பற்றி நீ நிறையத் தெரிந்து வைத்திருக்கிறாய். எனக்கென்று ஒரு பொறுப்பு இருப்பதை மட்டும் மறந்து விட்டாய். உனக்கென்று நான் செய்து வைக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறதே, அம்மா. நாமாக உற்பத்தி செய்து கொள்ளுகிற கடமைகளைவிட ஏற்கனவே உருவாகி இருக்கிற கடமைதானே அலட்சியம் செய்ய முடியாதது?''

வாதங்களை வாழ்க்கை நங்கூரம் பாய்ச்சி நிறுத்திவிடும் என்று மனோன்மணிக்கு உணர்த்திற்று. வாசுவின் பேச்சு எதிர்த்துப் பேசுவதற்கு எதுவும் இல்லாமல் போனதால் தன் அண்ணன் முகத்தில் பதிந்திருந்த பார்வையை அப்பால் நகர்த்தினாள்.

உடனடியாக முடிப்பதைவிட இடைவெளி விட்டுச் செய்வது எதிர்பார்த்த பயனை அளிக்கும் என்பது வாசுவுக்குத் தெரியும். சிந்தனைகளின் இடையே தன் தங்கையை நிறுத்தி விட்டு வெளியே புறப்பட்டுச் சென்றான்.

வெகுநேரம் தன் அண்ணனுடைய அறையிலேயே உட்கார்ந்து ஜன்னல் வழியாக வெளியே வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மனோன்மணி.

காலை நேரத்துச் சுறுசுறுப்பு தெருவில் காணப்பட்டது. சமுதாயந்தான் துளிக்கூட நகரவில்லையே தவிர அதில் உள்ள மக்கள் ஓடிக் கொண்டிருந்தனர். வாழ்வைச் சிறைப்படுத்திவிட்டு வயிற்றை மட்டும் விரட்டி ஓட்டிக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டம்...! சலவைத் தொழிலாளி வெளுக்க எடுத்துச் செல்லும் துணி மூட்டை ஒன்று தெரு முழுதும் விழுந்து சிதறிக் கிடப்பது போலத் தோன்றிற்று மனோன்மணிக்கு அவர்களைப் பார்த்தபோது. கண்ணைக் கவரும் பட்டாடைகள் - எண்ணெய் ஏறிய சீட்டித் துணிகள் - விரைத்துக் கொண்டிருந்தவை - விலா எலும்பு நொறுங்கியவை - உருவாகத்

தோன்றியவை - ஒட்டுப்போட்ட பிறகும் அற்றுப் போனவை - ஒத்து வராதவை அனைத்தும் ஒரு மூட்டையாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால்... அத்தனையும் அழுக்கேறி இருந்தன.

ஒரு தட்டில் இரண்டு வடைகளை எடுத்து வந்த சிறுவன் ஒருவன் சுற்றிலும் வேடிக்கை பார்த்துக்கொண்டே நடந்தான். எப்போதும் நிகழ்பவைகூடச் சில பருவங்களில் அப்போது நடக்கும் அதிசயமாக இருக்கும். அதன் விளைவுதான் போலிருக்கிறது அவனுடைய செயல். எங்கிருந்தோ பறந்துவந்த காக்கை ஒன்று ஒரு வடையைக் கொத்திக் கவ்விக் கொண்டு உயரத்துக்குப் பறந்தது. காக்கைத் தட்டைத் தாக்கியவாறு தடுமாறி அதைக் கீழே போட்டு விட்டான் அந்தச் சிறுவன். அதிலிருந்து விழுந்த இன்னொரு வடையை வயிற்றுப் பசி தங்காத பிச்சைக்காரச் சிறுவனொருவன் எடுத்துக் கடிக்கத் தொடங்கினான். காக்கைக்குப் பறி கொடுத்தபோது அதை ஒரு வேடிக்கையாக எண்ணிக் கைதட்டிச் சிரித்த மக்கள் ஏழைச் சிறுவனை ஏசத்தொடங்கினர்.

என்ன நினைத்துக்கொண்டாளோ தெரியவில்லை, எழுந்து ஆசிரமத்தை நோக்கி நடந்தாள் மனோன்மணி.

வாசு வீட்டுக்குத் திரும்பியபோது திறந்து கிடந்த அவனுடைய அறையும் காலியாக இருந்தது; மனோன்மணியின் அறையும் பூட்டிக் கிடந்தது. சாயம் போய் வெளுத்துப்போன துணியை எடுத்துப் பார்ப்பதுபோலத் தன் அறையைப் பார்த்தான். தன்னிடம் அவளை வைத்துக்கொண்டு தொல்லைப்படுவதைவிட வேறு எவனிடமாவது அவளை ஒப்படைத்து அவனை வேதனைப்படச் செய்யலாம் என்ற எண்ணந்தான் ஏற்பட்டது வாசுவுக்கு. அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடுவது என்று முடிவு செய்தான்.

மனோன்மணிக்கு மணவாளன் தேடுவது அவளைத் தவிர, மற்ற எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக ஆகிவிட்டது. நிர்ணயிக்கப்பட்ட முடிவைப் பற்றி நினைவே இல்லாமல் தானே தேர்ந்தெடுத்த இலக்கை நோக்கிப் பாதையை வகுத்துக்கொண்டு அதில் நடப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாள் அவள். உணர்வுகளையும் சிந்தனைகளையும் உருக்கி ஏதோ ஒரு உருவாக ஆக்கிய பிறகு எண்ணங்களும் ஈடுபாடுகளும் அதைவிட்டு நகர அச்சப்படும். இந்த அச்சந்தான் மன உறுதிக்கு அடிப்படையாக அமைகிறது. இயல்பான உருவம் அப்படியே மாறாமல் இருப்பதாகத்தான் நினைத்தான் வாசு. இடைப்பட்டவை அதை அடியோடு அழித்துவிட்டு இன்னொன்றை அந்த இடத்தில் பொருத்தி விட்டதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆறுகளை உருவாக்குகிற மலைகள் அவற்றை வழியனுப்பி வைக்கின்றன.

அவற்றை வரவேற்கக் காத்திருக்கிறது கடல். இடையில் அந்த ஆறு உருவாக்கும் வரலாறுகள் இவையிரண்டுக்கும் அப்பாற்பட்டவை.

அன்று மனோன்மணி ஆசிரமத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது இரண்டாவது முறையாக அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான் வாசு. தன்னுடைய அண்ணனின் அழைப்பு காதில் விழுந்ததும் அவனுடைய அறை நோக்கி நடந்தாள். வழுக்கி விழச் செய்யும் இடம் என்று ஏற்கனவே தெரிந்த இடத்தை நெருங்கும்போது பாதங்களை அழுத்திப் பதித்து அடிகளை எடுத்து வைக்க வேண்டும் என்ற உணர்வோடு அதை அண்டுவது போலத் தன்னைத் தயார் செய்துகொண்டு அவனோடு பேசப் போனாள் அவள்.

''இரண்டு நாட்களில் உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள், அம்மா'' என்று சொல்லித் தன்னை ஒரு அறிவிப்புப் பலகையாக மட்டும் ஆக்கிக்கொண்டு அதற்குமேல் எதுவும் பேசாமல் அவளை அனுப்பி வைத்தான் வாசு.

பட்கை வலித்துச் செல்பவன்மேல் படரும் காற்றுப் பயனற்றுப் போவதைப் போலத்தான் ஆனது அந்த அறிவிப்பு. அங்கேயே அதை மறந்துவிட்டு அதற்கு அப்பால் நடந்தாள் மனோன்மணி.

அதைப்பற்றி விரிவாக அவளோடு பேச அன்றிரவு அவளுக்காகக் காத்திருந்தான் வாசு. நேரம் தனக்கு நேர்ந்துள்ள கதியை நினைத்துப் பார்க்கக்கூட வழியில்லாமல் அழிந்து கொண்டிருந்தது.

எது எப்படியிருந்தாலும் வீட்டுக்குத் திரும்பியவுடன் தன் அண்ணனை ஒருமுறை சந்தித்து அன்று நடந்தவை அத்தனையையும் அவன் மனதில் படியச் செய்துவிட்டுத்தான் தன் அறைக்குச் செல்வாள் மனோன்மணி. எவ்வளவு நேரமானாலும் அவள் வரும்வரை காத்திருந்து அவளைப் பார்த்துவிட்டுக் கண்ணயருவது வாசுவுக்குப் பழக்கமாகிவிட்டது. படிக்கிற வழக்கத்தை அவன் அடியோடு நிறுத்தி விட்டான். அச்சிடப்பட்டக் கருத்துக்களைக் கண்கள் பார்ப்பதைவிட பதிவு செய்யப்பட்ட கருத்துக்களைக் காதுகள் கேட்பதுதான் சிறந்தது என்ற எண்ணத்தாலோ என்னவோ அவனை அப்படிப் பழக்கிவந்தாள் மனோன்மணி.

கடிகாரம் காலம் கடந்து கொண்டிருக்கிறது என்பதை பலமுறைகள் வாசுவுக்குக் கவனப்படுத்திவிட்டது. இருந்தாலும் தன் தங்கையின் மேல் நம்பிக்கையால் தன் இடத்தைவிட்டு நகராமலும் துளிக்கூட அயராமலும் காத்திருந்தான் அவன்.

கோழி கூவிற்று. குழாய்களிலிருந்து நீர் விழும் ஓசை கேட்டது. கோலம் போடுகிற பெண்களின் குரலொலிகள் கேட்டன. நகர்த்தப் படுகிற பாத்திரங்கள் ஓசை செய்தன. அழுத்திப் பதிக்கப்படுகிற பாதங்கள் அரவமுண்டாக்கின. ஆறு ஒலிகளை உதிர்த்துவிட்டு தன்னுடைய அன்றைய கடமையை அப்போதிருந்து தொடங்கிற்று கடிகாரம். உதித்த கதிரவனுக்கு முளைத்த சிறகுகளான அவனுடைய கதிர்கள் வாசுவின் விழிகளைக் கூசவைத்தன.

ஏக்கம் எரிமலைகளை உண்டாக்குவதில்லை; எரிகிற பிணமாகத்தான் இதயத்தை ஆக்கிவிடுகிறது. இனி அங்கேயே உட்கார்ந்திருப்பதால் எந்தவிதப் பயனும் ஏற்படாது என்ற எண்ணத்தால் எழுப்பப்பட்டு ஆசிரமத்தை நோக்கி நடந்தான் வாசு.

மனோன்மணியைப் பார்த்ததும் வாசுவிடம் இருந்த பரபரப்பு பறந்தோடிவிட்டது. தரையில் உட்கார்ந்து சுவற்றில் சாய்ந்து கொண்டிருந்தாள் அவள்; விழிகள் மூடியிருந்தன. பக்கத்தில் கனமான போர்வையால் போர்த்தப்பட்டு யாரோ படுத்திருப்பது தெரிந்தது. மருந்து சீசாவும் மூடிபோட்ட பாத்திரமொன்றும் அருகே காணப்பட்டன.

தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த பருவத்தில்தான் தங்கையின் முகத்தைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறான் வாசு. அதற்குப் பிறகு அப்படிப் பார்க்க வேண்டும் என்ற நினைவே அவனுக்கு ஏற்பட்டதில்லை. இப்போது மூடிக்கிடந்த விழிகளைத் தேடியலைந்த விழிகளால் திரையிட்டு நின்றான் அவன்.

அந்த முகம்...வட்டமான ஒரு வடிவமாகத் தொட்டிலில் கிடந்தது ஒரு காலத்தில். இப்போது... வனப்பேறிய சித்திரமாக உருமாறி அவன் வருங்காலத்தைப் பற்றிய கவலையை அவனுக்கு உண்டாக்கிக் கொண்டிருந்தது. பல் முளைக்காத பருவத்தில் வாயைப் பிளந்து சிரித்து அவனை வரவேற்பாள். இப்போது... ஒளி வீசும் வெள்ளைநிறம் பற்களாகி ஒருமித்திருக்கும்போதும் அவை எப்போதும் தெரிவதில்லை. இடுப்பிலே தூக்கி வைத்துக்கொண்டு அவன் அவளுக்கு வேடிக்கை காட்டிய காலம் அவனுடைய கவனத்துக்கு வந்தது. இப்போது... இதயத்திலே இருந்து கொண்டு இல்லாத தொல்லைகள் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். எது எதிரே தோன்றினாலும் அது தனக்கே வேண்டும் என்று அவள் அடம் பிடித்தழுத காட்சி இன்னும் அவன் மனத்திரையை விட்டு மறையவில்லை. இப்போது... எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு மண் தரையில் உட்கார்ந்து கண்மூடித் தூங்குகிறாள். வளர்ச்சி அடையும் ஒரு பெண்ணின் வாழ்வு எப்படியோ தொடங்கி எதிர்பாராத வகையில் மாறுகிறது என்பதை நினைத்து நெகிழ்ந்தான் வாசு.

மனோன்மணியின் விழிகள் தம் இமைத்திரையை ஒதுக்கியபோது படுத்திருந்த உருவத்தில் பார்வையைப் படரச் செய்தன. அடுத்து அவை வாயிலை நோக்கித் திரும்பியபோது... எழுந்து விரைந்து நடந்து தன் அண்ணனின் அருகில் நின்றாள் அவள்.

''முந்தா நாள் இரவிலிருந்தே பார்வதிக்குக் கடுமையான ஜுரம் அண்ணா. இன்னும் அவள் கண் திறக்கவில்லை.''

வலிய வாக்குமூலம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் வாழ்வில் அமைவது உண்டு என்பது வாசுவுக்குத் தெரியும்.

''உன்னால் வர முடியவில்லை என்பதை யாரிடமாவது சொல்லியாவது அனுப்பியிருக்கக் கூடாதா, மனோ?'' என்றான் வாசு.

அலுப்புக்குக்கூட அலுப்பு ஏற்பட்டுவிட்டது என்பதை உணர்த்திற்று அவனுடைய குரல். அப்படி ஒன்றைச் செய்திருக்க வேண்டுமென்ற நினைவு அப்போதுதான் மனோன்மணிக்கு ஏற்பட்டது.

''இப்போது அவளுக்கு உடம்பு எப்படி இருக்கிறது மனோ?'' என்று கேட்டான் வாசு.

''இன்னும் சுயநினைவுக்கு அவள் வரவில்லை, அண்ணா.''

இப்படி அவன் தங்கை தளர்ந்த குரலில் தாங்க முடியாத வேதனையை வெளியிட்டு அவனிடம் இதுவரையில் பேசியதே இல்லை. மலர்ந்த பிறகும் அரும்பாகவே அவனை மதித்த அவனுக்கு அவளுடைய மனம் காய்த்துக் கனியாக வருவதைக் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. சிரிப்பை சிந்தனை முந்திக்கொண்டது.

''நம்முடைய வீட்டுக்கு அவளை அழைத்துச் சென்றுவிட்டால், என்ன மனோ?''

''கூடாது, அண்ணா. அது இங்குள்ள மற்றவர்களுக்குத் தங்களை அனாதைகள் என்று நினைக்கத் தூண்டிவிடும்.''

அரிச்சுவடிப் புத்தகந்தான் அவள் என்று அதுவரை எண்ணியிருந்த வாசுவுக்கு அவள் ஒரு அகராதியாக உருவெடுத்திருப்பது அப்போதுதான் புரிந்தது. கதிரவனுக்குத் திரியிட்டு எண்ணை ஊற்ற நினைப்பது முதிராதவர்கள் செய்யும் முடிவாகத்தான் ஆகிவிடுமென்பதில் அவனுக்குத் தெளிவு ஏற்பட்டுவிட்டது.

''அவளுக்கு முழுதும் குணமேற்பட்டவுடன் வீட்டுக்கு வந்துவிடு, மனோ. ஆனால்...''

முற்றுப்புள்ளி வைக்காமல் பேச்சில் இடைவேளை விடுவது, முக்கியமானது தொடருகிறது என்பதை உணர்த்துவதற்குத்தான் என்பது மனோன்மணிக்குத் தெரியும். தன் மனதை அலையவிடவில்லை என்பதைத் தன் முகத்தோற்றத்தால் அவனுக்குத் தெரிவித்தாள்.

"உன் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. அது என்னைத்தான் தூங்க விடாமல் கண்விழிக்கச் செய்யும்."

பாசம் தன் பசுமையால் மனோன்மணியின் இதயத்தைப் பறித்தெடுத்துச் சூடிக்கொண்டது. திவலையாகாமல் தேங்கி நின்ற கண்ணீரின் வழியே தன் அண்ணனைப் பார்த்தாள். அவன் சென்று கொண்டிருந்தான். தன் தோற்றத்தை அவளுடைய பார்வையிலிருந்து மறையச் செய்ய எவ்வளவு தூரம் அவன் நடக்க வேண்டிவரும் என்பதைக் குறித்துக் கொள்ள நீண்ட நேரம் அவள் காத்திருந்தாள். அவன் என்னவோ அவ்வளவு நேரமாகியும்கூட நடந்துகொண்டேதான் இருந்தான். திரும்ப வேண்டிய இடம் மிக அருகிலிருந்தாலும் அவன் திரும்பாமல் வயல்களையும் வரப்புகளையும் கடந்து சென்றுகொண்டேதான் இருந்தான். இமைகள் அவளோடு ஒத்துழைக்காமல் மூடிக்கொண்டன. அப்போதும் அவன் நடந்து செல்லுவது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

# 4

பெண்...! அவள் மலராக மட்டும் இருப்பவள் அல்ல. அந்த மலருக்கு உருக்கொடுக்கும் மண்ணாகவும் இருப்பவள். மலர் அனுபவிக்கப் பயன்படுகிறது; மண் ஆதரவுக்குத் தேவைப்படுகிறது. எழிலும் மணமும் மட்டுந்தான் மலரிலிருந்து எதிர்பார்க்கப்படுபவை. மண்ணில் பொன் புதைந்திருக்கிறது; புசிக்கும் உணவு கிடைக்கிறது; தாங்கிக் கொள்ளும் பொறுமை இருக்கிறது. மலர் மயங்கச் செய்கிறது. மண் மதிப்பைப் பெறுகிறது. ஆனால்... பெண்ணை மண்ணாகப் பார்க்க எவரும் விரும்புவதில்லை; மலராக்கி முகரத்தான் மனந்துடிக்கிறார்கள். மயங்கத் தவிக்கும் இந்த உலகத்தில் மதிப்புக்கும் மரியாதைக்கும் இடம் எப்படிக் கிடைக்கும்?

மனோன்மணி தன் வீட்டுக்கு இன்னும் திரும்பவில்லை. வாசு அதைப் பற்றிக் கவலைப்படவில்லை; இருந்தாலும் அவனுக்கு எதுவுமே ஓடவில்லை. அவனுடைய உடல்தான் தன்னுடைய தேவைகளுக்காக அவனை இயங்கிக் கொண்டிருந்தது.

பெண் கேட்டவர்கள் அன்று அவளைப் பார்ப்பதற்காக வீட்டுக்கு வந்திருந்தார்கள். பையன் அமெரிக்காவில் படித்துவிட்டு அந்தஸ்துள்ள பதவியில் இருப்பவன். ஏற்ற இடந்தான்; அதற்கென்று எந்த முயற்சியும் எடுக்காமல் கிடைத்திருக்கிறது. வாசுவுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. அழைத்தால்கூட தன் தங்கை வரமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். உடுத்திய உடையைத் தவிர வேறெதையும் அவள் எடுத்துச் செல்லவில்லை. அவர்களை அங்கே அழைத்துச் செல்லுவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

எல்லா விவரங்களையும் அவர்களிடம் எடுத்துச் சொல்லி இன்னொரு தடவைதான் அவளைப் பார்க்கலாம் என்று கூறினான் வாசு. ஆனால் மாப்பிள்ளைப் பையன் இதையே முடித்து விடுவது என்ற தீர்மானத்தோடு வந்திருந்தான். பெண்ணைத் தேர்ந்தெடுப்பதில் அவன் ஈடுபடவில்லை; தேடுவதில்தான் கவனஞ் செலுத்தி வந்தான். அவனுக்கு ஈடான குடும்பங்கள் மிகமிக் குறைவானவை. அப்படி ஏதும் குறுக்கிட்டாலும் இணையான உருவங்கள் அமைவதில்லை. மனோன்மணியின் நிழல்படம் அவனுடைய நெஞ்சைவிட்டகல மறுத்துவிட்டது. மனதுக்கு மட்டுமல்லாமல் மாளிகைக்கும் பொருத்தமானவளாக ஒருத்தி தோன்றும்போது தோய்வுக்கு இடங்கொடுக்கக் கூடாது என்றுதான் அவன் நினைத்தான். அங்கேயே போய்ப் பார்த்துவிட முடிவு செய்தான்.

''உடல் நிலையை மட்டும் நான் குறிப்பிடவில்லை; மன நிலையும் அவளுக்கு மாறியிருக்க வேண்டுமே,'' என்றான் வாசு.

''அதை என்னால் மாற்றிவிட முடியும்,'' என்றான் அந்த இளைஞன்.

அவனை இழக்க மனமில்லாததால் அந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள நேரிட்டது. இருவரும் ஆசிரமத்துக்குப் புறப்பட்டனர்.

பார்வதி ஓரளவுதான் குணமடைந்திருந்தாள். அதுவரை உறக்கத்தோடு ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த மனோன்மணி அன்றுதான் அதற்கு வெற்றி தேடித்தர ஒத்துக் கொண்டிருந்தாள். அதற்கு அலுத்துப்போன உறக்கம் தன்னை அலைக்கழித்த அந்தப் பெண்ணோடு முழு உறவும் கொள்ள மறுத்துவிட்டது. அவள் படுத்துக் கிடந்தாளே தவிர களைப்பை இழக்கவில்லை.

அவசரமாக யாரோ அவளை எழுப்பினார்கள். எழுந்து உட்காருவதைவிடச் சுருண்டு படுத்துக் கொள்ளவே அவள் விரும்பினாள். ஆனால், 'மனோ!' என்று வெளியிலிருந்து கேட்ட அவளுடைய அண்ணனுடைய குரல் அவளை எழுந்தோடச்செய்தது.

அழுக்குப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட துணியைப் போல தோற்றமளித்த தன் தங்கையைக் கண்டதும் கோபம் வந்துவிட்டது வாசுவுக்கு.

''என்ன மனோ, இது? போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வா,'' என்று அதட்டிவிட்டான் அவன்.

அவனுடைய குரல் மனோன்மணியின் அலுப்பைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டதால் நடந்து செல்லாமல் பறந்து பாய்ந்தாள் மனோ. தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டு திரும்பினாள்.

அவளுடைய அண்ணன் மட்டும் அங்கே இல்லை. மேகத்தில் ஏறிச் சவாரி செய்வதையே தன் வாழ்வாகப் பெற்றவனைப்போலத் தோன்றிய ஒரு இளைஞன் அவள்முன் தென்றலில் தவழ்ந்து கொண்டிருந்தான். அவன் யார் என்று மனோன்மணிக்குத் தெரியவில்லை. ஆனால்... இவள் யார் என்று ஆராய்வதில் அவன் முனைந்திருப்பது மட்டும் புரிந்தது அவளுக்கு.

''மனோ! இவர் நமக்கு தூரத்து உறவு. அமெரிக்காவில் படித்து விட்டுத் திரும்பியவர். நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். வீடு நிலம் எல்லாம் நம்மளவுக்கு இருக்கிறது'' என்று சொல்லி முடித்தான் வாசு.

வந்த மனிதனுக்கு வணக்கஞ்செலுத்திய மனோன்மணி இன்னும் சொல்ல வேண்டியது ஏதோ மிச்சமிருக்கிறது என்பதை உணர்த்துவதைப் போல வாசுவின் முகத்தையே பார்த்தாள்.

''பெயர் சேகரன்'' என்று அவள் எதிர்பார்த்ததை இணைத்தான் அவன்.

பிரச்னையைத் துவக்கி வைப்பது பெரும்பாடாக தோன்றியது வாசுவுக்கு. சிந்தனைகளை எங்கெங்கோ விரட்டிப் பார்த்தான். அத்தனையும் புறமுதுகிட்டுத்தான் ஓடி வந்தனவே தவிர ஒன்றாவது வெற்றியைக் கொண்டு வரவில்லை.

''இந்த ஆசிரமத்தை நான் பார்த்ததே இல்லை, மனோ'' என்று தொடங்கினான்.

அறிமுகத்துக்குப் பிறகு வெளிப்படும் இந்த அறிவிப்பு எதைக் குறிக்கிறது என்பது மனோன்மணிக்குப் புரிந்ததுதான். உணர்வுகள் அற்றவள் அல்ல அவள்; அவற்றுக்கு உருவங்கள் கொடுக்க முனைந்ததில்லை இதுவரை. இந்த மாதிரி நிலைமைகளுக்குத் தேவைப்படும் தெம்பும் தெளிவுங்கூட இல்லாமல் கடந்த இரண்டு மூன்று நாட்களாகத் தன் உடலை வேறு அவள் வருத்திக் கொண்டிருந்திருக்கிறாள்.

''வா, அண்ணா. நான் சுற்றிக் காட்டுகிறேன்'' என்று புறப்பட்டாள் அவள்.

''வேண்டாம், மனோ. நானே சுற்றிப் பார்க்கிறேன். நீ இவரோடு பேசிக் கொண்டிரு,'' என்று சொல்லி நடந்தான் வாசு.

துடுப்புகள் கை தவறி ஆற்றில் விழுந்துவிட்டதால் நீரோட்டத்தோடு செல்லும் படகில் பயணம் செய்வதுபோலத் தோன்றிற்று மனோன்மணிக்கு.

ஆசிரமத்துப் பெண்கள் சிலர் வெகு தூரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தனர். வண்ணச் சித்திரங்கள் வரிசைப்படுத்தப்பட்டுப் பின் நகர்த்தப்படுவது போன்ற அந்தக் காட்சியில் மனதை இழைய விடுவது ஒருவித மகிழ்ச்சியை அளித்தது மனோன்மணிக்கு.

''உன்னைச் சந்தித்ததில் எனக்கு ஒருவிதத்தில் சந்தோஷந்தான் ஏற்படுகிறது'' என்று பேச்சைத் தொடங்கினான் சேகர்.

இலக்கியப் புத்தகத்தைப் படித்துவிட்டுத் தொடங்க வேண்டிய ஒரு உரையாடலை இலக்கணப் புத்தக அறிவைக் கொண்டு ஒருமையில் தொடங்கியது அவளிடம் இயல்பாக வளர்ந்திருந்த தன்மான உணர்வை வம்புக்கிழுப்பதுபோலத் தோன்றிற்று மனோன்மணிக்கு. அதற்கு பதில் சொல்லாமல் தான் ரசித்த காட்சிக்கே மனதை விரட்டினாள்.

''உன்னைப்பற்றி வாசு நிறையச் சொல்லி இருக்கிறார், மிஸ்.மனோன்மணி'' என்று கூறி அவளுடைய கவனத்தைப் பிடித்திழுக்க முயன்றான் சேகர்.

விலக மறுக்கிற மாட்டை விரட்டி ஓட்டுவதைத் தவிர வேறு வழியே இல்லாமல் போனது.

''ஒரு பெண்ணைப் பற்றி அவளுடைய அண்ணனிடமே கேட்டுத் தெரிந்துகொண்டால் அவளுடைய பெருமைகளை மட்டுந்தான் புரிந்துகொள்ள முடியும்,'' என்றாள் மனோன்மணி.

தான் திறக்க முயற்சிக்கும்போது அவள் இழுத்துத் தாள் போடுகிறாள் என்பது சேகருக்குப் புரிந்துவிட்டது. இருந்தாலும் ஏதோ ஒரு நோக்கத்தை வரையறுத்துக்கொண்டு அவன் அவளைச் சந்தித்தால் தன்னுடைய உணர்ச்சிகளின் தாக்குதல்களை உதறித் தள்ளிவிட்டான். கடிவாளத்தைத் தளர்த்திவிட்டுக் காலத்தைத் தன்னிச்சைக்குச் சிறிது நேரம் அலையவிட்டான்.

''இப்போது வேறு ஏதாவது வேலை உனக்கு இருக்கிறதா, மிஸ்.மனோன்மணி?'' என்று கேட்டான் சேகர்.

வெகுண்டாள் மனோன்மணி; விவேகம் விரைந்து சென்று அவளுடைய வேகத்தைத் தணித்தது.

''தேவைப்படும் வேலைகளைச் செய்வதைவிடத் தேடிவரும் வேலைகளைக் கவனிப்பதுதானே சமுதாயத்தில் மரியாதைக்குரிய ஒன்றாக மதிக்கப்படுகிறது,'' என்றாள் அவள்.

தான் திரட்டிச் சேர்ப்பவை அனைத்தையும் அவள் சிதறச் செய்கிறாள் என்பதை அவன் உணர்ந்தான். ஆத்திரப்பட அவனால் முடியவில்லை; அலட்சியப்படுத்தும்படி அவள் இல்லை.

''யாரோ ஒரு சில அனாதைகளுக்கு ஆதரவு அளித்து விடுவதால் அந்தப் பிரச்னை தீர்ந்துவிடுமா, மிஸ்.மனோ?''

அவனுடைய வளர்ச்சியின் அளவுகோலாக அந்த வார்த்தைகள் தோன்றின மனோன்மணிக்கு.

''முதலுதவி மருத்துவமாகிவிடாது; முடிந்தவர்கள் அதைச் செய்யாமலும் இருக்கக்கூடாது.''

ஒரு கத்தரிக்கோலைத் தன் நாக்கில் வைத்திருக்கும் அந்தப் பெண்ணைத் தன்னுடைய கட்டுக்குள் கொண்டுவருவது கடினமானதுதான் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. அவளை மனைவியாக்கிக்கொள்ளும் எண்ணம் அவனை விட்டுப் பிரிந்தது. தன்னையொத்த அந்தஸ்தில் உள்ள பெண் ஒருத்தி இப்படிப்பட்ட தரங்குறைந்த சூழ்நிலைகளோடு இணைந்திருப்பதை மட்டும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''மிஸ்.மனோ! இப்போதெல்லாம் நம்மைப் போன்ற பெரிய இடத்துப் பெண்கள் குடும்பங்களில் இருந்துகொண்டே சமூக சேவை செய்து வருகிறார்கள் என்பது உனக்குத்தெரியாது என்று நினைக்கிறேன்'' என்று எதையோ சொல்ல ஆரம்பித்தான் சேகர்.

அப்போதைக்கப்போது பறித்து உடனுக்குடனேயே தொடுப்பது என்பது அதில் பயிற்சியற்றவர்களுக்குத் துரிதமாகச் செய்யக்கூடிய அல்லவாகையால் தொடங்கியதைத் தொடருவதற்கு அவகாசம் தேவைப்பட்டது அவனுக்கு. அதற்குமேல் அவன் பேசுவதை மனோன்மணி விரும்பவில்லை.

''நான் அப்படிப்பட்டவர்களோடு நிறையப் பழகியிருக்கிறேன், மிஸ்டர் சேகர்! எனக்கு அவர்களைப் பற்றி நன்றாகவே தெரியும். எதற்கு மதிப்புக் கிடைக்கிறதோ அது எதுவாக இருந்தாலும் எங்களுடையது என்பார்கள். அதன்பால் உள்ள அக்கறையால் அல்ல; அந்த மதிப்பைப் பங்கிட்டுக் கொள்ள. அவர்கள் சேவை செய்வதில்லை; தங்களுடைய தேவையைத் தேடுகிறார்கள்.''

கொட்டிய கொதி நீரால் வெந்தது சேகரின் உள்ளம். ஊதி ஆற்றிக்கொள்ளக்கூட முடியாமல் தவித்தான்.

அப்போது வாசுவும் மணிவண்ணனும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

''இவர்தான் மணிவண்ணன், இந்த ஆசிரமத்தை நடத்தி வருபவர்'' என்று சேருக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தான் வாசு.

வணக்கம் செய்த மணிவண்ணனுக்கு அதைத் திரும்ப அளிக்கக் கைகளை உயர்த்திய சேகர் மனோன்மணியை ஒருமுறை திரும்பிப் பார்த்தான். அந்தக் கைகள் தம் நோக்கத்தைப் பூர்த்தி செய்யாமல் கீழே விழுந்தன.

''அப்படியானால் இப்படிப்பட்டவரோடுதான் நீ வாழப் போகிறாயா, மிஸ். மனோ?''

அவளைக் கூர்மையாகக் கவனித்துக்கொண்டே கேட்டான் சேகர்; கை மணிவண்ணனைச் சுட்டிக் காட்டியது.

மனோன்மணி அவன் முகத்தை ஊடுருவிப் பார்த்தாள். எரிச்சலும் ஏளனமும் அதிலிருந்து அவளை ஏறிட்டுப் பார்த்தன. மணிவண்ணனைத் திரும்பிப் பார்த்தாள். இயல்பாகவே குளிர்ந்து காணப்படும் அவனுடைய விழிகள் குழைந்து கொண்டிருந்தன. தன் அண்ணன் வாசுவை நோக்கிப் பாய்ந்தது அவளுடைய பார்வை. தளர்ந்த நடை நடந்து வரும் குழந்தை எங்கே தடுமாறி விழுந்துவிடப் போகிறதோ என்ற அச்சத்தோடு அதன் தாய் அதைப் பார்ப்பதுபோல அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் வாசு.

''திருமணம் செய்துகொள்ளும் எண்ணமே இதுவரை எனக்கேற்பட வில்லை. அது ஏற்படும்போது இப்படிப்பட்டவராகத்தான் எதிர்பார்ப்பேன்.''

அரங்கில் திரை விழுந்தது; அவையில் ஒளி தோன்றவில்லை. இருளில்தான் கலைந்து சென்றனர் அவர்கள் நால்வரும்.

மறுநாள் மனோன்மணி தன் வீட்டுக்குச் சென்றபோது இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததையே மறந்துவிட்டுத்தான் வாசு அவளோடு பழகினான். இனி ஒரு இக்கட்டும் ஏற்பட வழியில்லை என்ற நம்பிக்கை மனோன்மணியிடம் வளர்ந்தது.

# 5

காலம் அளவற்றது; அதைக் கணக்கிட உதவும் கடிகாரமும் காலண்டரும் வரையறைக்குட்பட்டவை. எண்ணிக்கையால் நிர்ணயிக்கப்படுபவைக்கும், நிறுத்துத் தரப்படுபவைக்கும், அளந்து காட்டப்படுபவைக்கும் பயன்படுகிற சாதனங்களைப் போலத்தான் காலத்தின் அளவுகோல்களும் அமைந்திருந்தன. இயந்திரங்களாக மனிதர்கள் இயங்குவதால்தான் எல்லையைச் சுருக்கி வகுத்துக்கொண்டு அதற்குள் சுற்றிச் சுற்றி வருகின்றனர்; இதயங்களால் எதையும் சந்திப்பவர்கள் குறிப்பிட்ட வட்டத்துக்குக் கட்டுப்பட்ட கடிகாரத்தையோ வகுக்கப்பட்ட வரையறைக்குள் வாழ்ந்து சாகும் காலண்டரையோ காலத்தின் அளவுகோல்களாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். உருவாகும் சமுதாயத்தின் இதய உணர்வுகளைக் கொண்டுதான் அதை அளந்து பார்ப்பார்கள்.

அனாதைகளை வாழ வைக்கிற முயற்சியில் தன் அண்ணனை அனாதையாக்கி வருவதை மனோன்மணி உணரவில்லை. மனோன்மணியின் வாழ்வு மட்டுந்தான் வாசுவுக்குள்ள பொறுப்பாக இல்லை; அவனுக்கே ஒரு வாழ்வு இருந்தது. பராமரிக்கும் நிலையில் இருப்பவர்கள் பண்பு காரணமாகவும் தமக்குள்ள பொறுப்புணர்வாலும் தங்களுடைய விருப்பு வெறுப்புகளை பகல் வெளிச்சமாக்கிக் காட்ட மாட்டார்கள். அவை முழு நிலவாகவும் ஆவதில்லை; கடும் இருளாக அவற்றை ஆக்கிவிடவும் அவர்களால் முடிவதில்லை. அவை தேய்பிறையாகவோ அல்லது வளர்பிறையாகவோ அவர்களிடம் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. தன்னுடைய இதய உணர்வுகளை வழியாமல் காத்துக்கொள்ளத்தான் வாசுவால் முடிந்ததே தவிர வாழாமல் செய்துவிட இயலவில்லை. போக வேண்டியவள் அதற்கு ஒத்துக்கொள்ள மறுப்பதால் வரவேண்டியவள் எங்கேயோ இருந்து தவித்துக் கொண்டிருந்தாள்.

மணிவண்ணன் நடத்தையில் மட்டும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. தனக்கு உதவி செய்பவள் என்றுதான் மனோன்மணியை மதித்து நடந்துவந்தான் இதுவரை. இப்போது...? உறவு கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது என்ற உணர்வு அவனிடம் வளர வழிகோலப்பட்டிருந்தது. எப்போது மனோன்மணியைச் சந்திக்க நேர்ந்தாலும் அவளுடைய உள்ளத்தோடு மட்டும் தன் அலுவல்களை நடத்திக் கொண்டிருந்தவன் அந்த உருவத்தோடும் தனக்குக் காரியம் இருக்கிறது என்ற நினைவுக்கு அடிமைப்பட்டான்.

முற்றாத வளர்ச்சிக்குத்தானே இளமை என்று பெயர் சூடப்பட்டிருக்கிறது? தேர்ச்சி பெற்ற ஒரு சிலருக்குத்தான் அந்த பருவத்தில் திட்டமிட்டுச் செயலாற்ற முடியும். திறங் குறைந்தவர்கள் மனம் நெகிழ்ந்தவர்களாகவே மலர்க் கூட்டத்தைப் பார்க்கிறார்கள். எந்த மலரும் சொந்த மலராகவே தோன்றுகிறது அவர்களுக்கு. மலருக்குத் தன்னை மறக்காத பயிற்சி அளிக்கப்பட்டிருந்தால் தன்னை அது காத்துக் கொள்ளும். அது அற்றவை முற்றுகை இடத் தொடங்கும்போதே வெற்றிக்கு இடங்கொடுத்து விடுகின்றன.

''நீங்கள் இங்கே வந்த பிறகு ஆசிரமத்துக்கு அந்தஸ்து மட்டும் ஏற்படவில்லை; அழகும் ஏற்பட்டிருக்கிறது'' என்றான் மணிவண்ணன் ஒருநாள் மனோன்மணியிடம்.

இதை அவனிடமிருந்து அவள் எதிர்பார்க்கவில்லை; இருந்தாலும் அவளுடைய பெண்மை அதை ஏற்றுக்கொண்டது. பொருள் பொதிந்த பார்வையை எதிர்பார்த்தான் மணிவண்ணன். ஒரு புன்னகையை மட்டும் அவனுக்கு அளித்துவிட்டுத் தன் அலுவல்களைக் கவனிக்கச் சென்றாள் மனோன்மணி.

அவளுடைய நினைவுகளில் அவன் தங்கவில்லை. தெளிக்கப்பட்ட பன்னீரைப்போல சிறிது நேரம் அவனுடைய சொற்கள் அவளுடைய சிந்தனைகளில் மணம் வீசின. ஏதோ ஒன்றைச் சுற்றிச் சுற்றி அவளுடைய மனம் சென்று கொண்டிருந்தது. நீரற்ற வறண்ட காற்று மேகத்தை மழையாக்காவிட்டாலும் அதை வானத்தில் நகர்த்திச் சென்று அலையச் செய்கிறதல்லவா? அதேபோலத்தான் மனோன்மணிக்கும் தேர்ந்து விட்டது. தன் அழகைத் தானே அனுபவிக்கும் பழக்கம் அவளைவிட்டு ஒதுங்கி நெடுநாட்களாகிவிட்டது. இன்று அதைப் பற்றிய நினைவு அவளுக்கு ஏற்பட்டது. கண்ணாடி முன் நின்று தன் முகத்தை என்னென்னவோ செய்து கொண்டாள்.

''இந்த அழகு எவரையும் ஆட்டி வைக்குமே!'' என்ற பார்வதியின் குரல் கேட்டுத் திரும்பினாள் அவள்.

விழிகளால் அவளை வெட்கத்துக்குள்ளாக்கினாள் அவளுடைய தோழி. பின்னால் பல பெண்கள் தன் செயலைக் கவனித்துக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது. வெட்கத்துக்கு வெற்றி கிடைக்கவில்லை; வேதனை அதை விரட்டித் துரத்திவிட்டது.

''நம்மைப் பற்றிய நினைவுகள் குறைத்துக் கொள்ளும்போதுதான் மற்றவர்களுக்காக உழைக்க நம்மால் முடியும் பார்வதி. இதை நான்தான் மறந்துவிட்டேன் என்றாலும் நீ கூட தூண்டிவிடுகிறாயே'' என்றாள் மனோ.

''நிறையப் படிப்பதால் நிலைமைகளை நீ உணர்ந்து கொள்ளுவ தில்லை. தமக்காகத்தான் எல்லோரும் எதிலும் ஈடுபடுகிறார்கள். ஏடுகளில் இருப்பவையில் உன்னை நீ இழந்துவிட்டாய்; எதிரே நடப்பது புரியவில்லை.''

''அதனால்தான் எல்லாமே பாழாகின்றன.''

அனுபவங்கள் முரண்படுகின்றன என்பதை அந்த இரு பெண்களும் புரிந்து வைத்திருந்ததால் அதற்குமேல் பேச்சை வளர்க்காமல் அத்தோடு முடித்துக்கொண்டனர்.

ஒரே வரிசையில் உள்ளங்கள் அனைத்தும் அடுக்கப்பட்டிருந்தால் கண்களை மூடிக்கொண்டு எல்லோரும் பயணம் செய்யலாம். ஆனால்... எத்தனை எத்தனை திருப்பங்கள்... திசை மாறுதல்கள்... பள்ளங்கள்... பாதாளங்கள்... கோணல்கள்... குறைபாடுகள்! பாதுகாப்போடு பயணம் செய்தால்கூடப் பாதைகள் மாறிப்போகின்றன.

அடிக்கடி சேகரன் அந்த ஆசிரமத்தில் தலைகாட்டினான். வரையறை இல்லாமல் எந்த நேரமாக இருந்தாலும் வரத் தொடங்கினான் அவன். வீங்கிப் பருத்துவரும் புண்ணைப் பார்ப்பதுபோல வேதனைப்பட்டாள் மனோன்மணி. மணிவண்ணனிடம் பல தடவைகள் இதைச் சுட்டிக்காட்டினாள். அவன் தன் ஆண்மையைப் புலப்படுத்துவதற்கு மாறாக அச்சத்தை வெளிப்படுத்தினான். அவளுக்கும் அவனோடு பேச மனம் வரவில்லை. ஏதோ ஒன்று தொடங்கியிருக்கிறது என்பதை உணர்ந்தாள் அவள். அதை எல்லோரும் ஒத்துக் கொள்ளவில்லை என்பது தெரிந்தபோது தன்னை உயிரோடு எரிப்பது போலிருந்தது அவளுக்கு.

அன்று இரவு அவள் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். இருளின் இடையே இரு உருவங்கள் ஆசிரமத்தின் நுழைவாயிலுக்கருகே நின்று பேசிக்கொண்டிருந்தன. அவள் அவர்களை நெருங்கியபோது பேச்சு நின்றுவிட்டது, திரும்பிப் பார்த்தாள்.

சேகரனும் அந்த ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும்...! அந்தப் பெண் உடனே உள்ளே ஓடிவிட்டாள்.

''உங்களுக்கு வெட்கமாக இல்லையா?'' என்று உரத்துக் கூச்சலிட்டாள் மனோன்மணி.

அவளை ஏளனமாகப் பார்த்தான் சேகர்.

''வெட்கப்பட இதில் என்ன இருக்கிறது, மிஸ்.மனோ? ஒரு பெண் என்றால் அவளிடம் எத்தனையோ உணர்ச்சிகள் இருக்கும். அவள் அதை வெளிப்படுத்தித்தானே தீர வேண்டும். இது ஆசிரமமா? அல்லது அடிமைகளை வளர்த்துவரும் கொட்டிலா?''

ஊதிக்கூட அவன் நெருப்பை வளர்க்கவில்லை; எதையோ ஊற்றி எரியச் செய்தான். உள்ளம் கொதித்துச் சொற்களையே குழைத்து விட்டதால் மனோன்மணியால் எதுவும் பேசமுடியவில்லை.

''இனி ஒருமுறை உங்களை இங்கே பார்த்தால் போலீசில் புகார் செய்துவிடுவேன். முதலில் இதைவிட்டு வெளியேறுங்கள்.''

கூறி முடித்துவிட்டு அவனை முறைத்துப் பார்த்தாள் மனோன்மணி. அதற்குமேல் தாக்குப் பிடிக்க சேகரால் முடியவில்லை. அமைதியாக வெளியேறினான்.

ஒருநாள் மனோன்மணி தன் வீட்டிலிருந்து ஆசிரமத்துக்குச் சென்றபோது காவல் துறையைச் சேர்ந்த காரொன்று அதன் வாயிலில் நின்றது. உள்ளே நுழைந்தபோது அதை அவள் பார்த்தாளே தவிர அதற்கென்று தன் சிந்தனைகளை ஒதுக்கவில்லை. தன்னுடைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினாள். சிறிது நேரத்தில் மணிவண்ணன் அவளை வரச் சொன்னதாக யாரோ ஒரு பெண் அவளிடம் தெரிவித்தாள்.

மணிவண்ணன் அறைக்கு அவள் சென்றபோது காவல்துறை அதிகாரி ஒருவர் அங்கே அமர்ந்திருந்தார். குற்றங்குறைகளைக் கவனப்படுத்தும் உருவங்களாகவே அந்தத் துறையினர் எந்த மனிதனுடைய மனதிலும் பதிந்திருப்பவர்களாதலால், மனோன்மணியின் மனம் துணுக்குறாமல் போகவில்லை. விவரங்களுக்கான வேட்கை அவளுயை மனதில் விளிம்பு வரை அறைந்திருந்தது. எதுவும் புரியாமல் மணிவண்ணனைப் பார்த்தாள்.

''வாருங்கள். இவர்தான் இந்த வட்டாரத்தின் போலீஸ் அதிகாரி,'' என்று அவரை அவளுக்கு அறிமுகம் செய்தான் மணிவண்ணன்.

''உட்காருங்கள் அம்மா,'' என்று அன்போடு அவர் கூறியபோது அதில் மரியாதை கலந்திருந்தது.

அவருடைய வேண்டுகோளுக்கேற்ப இயங்கினாள் அவள்.

''உங்கள் ஆசிரமத்தைப் பற்றித் தவறான தகவல்கள் கிடைத்திருப்பதாக மேலே இருந்து எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். விசாரித்துப் பதில் எழுத வேண்டி இருப்பதால் இங்கே வந்திருக்கிறேன்.''

தவறான தகவல்கள்... அவை!... அவளுக்குத் தெளிவாக விளக்கப்படவில்லை. இருந்தாலும் நினைவுகள் நெருப்புக்குள் விழுவதை உணர்ந்தாள். நடந்து செல்லும்போது, 'பாம்பு இருக்கிறது' என்று பொதுவாகச் சொன்னால் எந்தப் பக்கம் திரும்புவது என்பது புரியாமல் தவிப்பதைப்போல அவளுடைய மனம் திணறிற்று.

''நான் விசாரித்த வரையில் அப்படி எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை, அம்மா. உங்களையெல்லாம் பார்த்தால் நல்லவர்களாகத் தெரிகிறது. இருந்தாலும் உத்தரவு மேலே இருந்து வந்திருப்பதால் இன்னும் நன்றாக விசாரித்த பிறகுதான் நான் முடிவு செய்ய வேண்டி இருக்கும்.''

மேலே இருந்து என்று பொதுவாகத்தான் அந்த அதிகாரி குறிப்பிட்டாரே தவிர உயரத்தின் அளவை அவர் கூறவில்லை. அதனால் எதையும் தெளிவாக்கிக் கொள்ள மனோன்மணியால் முடியவில்லை.

அதிகாரி போய்விட்டார். ஆனாலும் அருவெறுப்பான ஏதோ ஒன்றில் விரல் பட்டுவிட்டால் கழுவிக் கொண்ட பிறகும் அந்த உணர்வு விட்டுப் பிரியாதிருப்பதைப் போல அன்று முழுதும் மனோன்மணி அதே எண்ணத்தில் எரிந்து கொண்டிருந்தாள்.

வீசிய புயல் அதன் விளைவுகளைப் பதிவு செய்து வைக்காவிட்டால் அது வெறும் காற்று என்றுதான் மதிக்கப்படும் என்பதே அதற்கே தெரியும். அதனால்தான் அது தன்னை வீணாக்கிக்கொள்ள விரும்புவதில்லை.

இரண்டு நாட்கள் கழித்து வம்புகளையும் வதந்திகளையும் வெளியிடுவதாலேயே வளமான வாழ்வு பெற்றிருக்கும் ஒரு தின இதழில் ஆசிரமத்தில் நடந்த இந்த விசாரணை புகைப்படங்களோடும் பெரிய பெரிய தலைப்புகளோடும் வெளியிடப்பட்டு அகில உலகத்துக்கும் தெரிவிக்க வேண்டிய ஒன்றாக்கப் பட்டிருந்தது. இளமை நிறைந்த மணிவண்ணனுடைய முகமும் அழகுக்கே பொறாமை உண்டாக்கும் மனோன்மணியின் படமும் அருகருகே அச்சிடப்பட்டிருந்தன.

மனோன்மணியைக் கூப்பிட்டழைத்து அவளுக்கு அதைக் காட்டினான் மணிவண்ணன். செய்திகள் சிந்தனைகளுக்கு உரமளிப்பவை என்றுதான் அவள் அதுவரை எண்ணி இருந்தாள். அவற்றால் சித்திரவதைக்கும் ஆளாக்க முடியும் என்பதை அப்போதுதான் புரிந்துகொண்டாள். வெட்டப்பட்டுக் கீழே விழுந்த கையை வேதனையோடு பார்ப்பதுபோல அந்தச் செய்தியையே பார்த்தாள். அதிலிருந்து விடுபட்டுப் பார்வையை மணிவண்ணன் பக்கம் திரும்பியபோது... அவன் அந்த இரு படங்களிலும் ஆழ்ந்துபோய் அனுபவித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. ஊதிவிடப்பட்ட பஞ்சுபோல அந்த இடத்துள்ளிருந்து பறந்தாள் வெளியே.

வேதனை தன்னுடைய பல தோற்றங்களை எப்போதெப்போதோ அவளுக்குக் காட்டி இருக்கிறது. அப்போதெல்லாம் வெட்டி முறித்திருக்கிறாளே தவிர அதன் வெப்பத்துக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டதில்லை. காய்ந்து சருகான பொருள்களைத் தீப்பற்றினால் அவை உடனே கொழுந்து விட்டு எரிந்து தம் கதையை முடித்துக் கொள்ளும். ஈரக்கசிவு எஞ்சியிருக்கும் பொருள்கள் எரியத் தொடங்கினால் கருகிப் புகைந்து கொண்டிருக்குமே தவிர விரைவில் காணாமல் போய்விடாது. அன்று முழுதுமே தன் மனதிலிருந்து தீ நாற்றம் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தாள் அவள்.

வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தபோது தன் காரை தானே ஓட்டிச் செல்லுகிற நினைவே அவளுக்கு ஏற்படவில்லை. வீதியிலிருந்து வேல்களாகத் தோன்றிய விழிகளால் அது தள்ளப்பட்டு ஓடுவதாக உணர்ந்தாள்.

வாசுவின் அறை அவன் உள்ளே இருக்கிறான் என்பதன் அறிவிப்பாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. வழக்கம்போல அது அவளுக்குப் புகலிடமாக இருக்குமா அல்லது அன்றிலிருந்து புதைகுழியாக ஆகிவிடுமா என்பதை அவனால் நிர்ணயிக்க முடியவில்லை. தாகத்தின் தவிப்பை வெள்ளத்தின் வேகம் தடுத்து நிறுத்துவது போலானது அவளுடைய மனோநிலை. கீழே இருந்தே அந்த மாடி அறையை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள். கொதித்த உள்ளம் கொப்பளிக்க தொடங்கியது. மெல்ல மாடிக்குச் சென்றாள்.

''வா, மனோ!'' என்று வாசு அவளை அமைதி குலையாமல் வரவேற்றபோது அவனுக்கு விஷயமே தெரியாதோ என்ற சந்தேகம் ஏற்பட்டது அவளுக்கு.

''பத்திரிகையில் பார்த்தேன்,'' என்று பதட்டமோ படபடப்போ இல்லாமல் அவன் தன் பேச்சைத் தொடர்ந்தான்.

''அண்ணா!'' என்று கதறிவிட்டாள் மனோன்மணி.

வாசு எந்தவித உணர்ச்சிக்கும் தன்னை ஆட்படுத்திக் கொள்ள வில்லை. கொதிக்கும் நீரை அவள் தன்மேல் கொட்டிக் கொண்டதாக அவன் நினைக்கவில்லை. கொப்புளத்தை அறுத்து மருந்திடும்போது அதன் வலி தாங்காமல் கூச்சலிடுகிறாள் என்றுதான் நினைத்தான்.

''அழாதே, மனோ. அழுகைக்கென்று ஒரு மதிப்பு இருக்கிறது. அது இல்லாமல் போய்விடும்!''

விளக்கை எரியச் செய்ய இருவருக்குமே தோன்றவில்லை. இருள் மெல்ல மெல்ல கருமையைப் பூசிக்கொண்டிருந்தது. எரியத் தொடங்கிய தெருவிளக்குகள் ஒளிக்கு உச்சவரம்பு விதித்து விட்டதால் அந்த அறையின் ஜன்னலருகே மட்டும் அது தன் சாயலைக் காட்டியது. வாழ்ந்து கெட்ட வானத்தின் ஒரு பகுதி மட்டும் தெரிந்தது. தவிக்க விட்டதால் துடித்துக் கொண்டிருந்தன தாரகைகள். நிலவின் ஒரு ஓரம் கத்தரிக்கப்பட்டு ஒட்டப்பட்டிருந்தது அங்கே

''என் தங்கையிடம் எனக்கு முழு நம்பிக்கை உண்டு, மனோ. அதை எந்தச் சூழ்நிலையாலும் மாற்றிவிட முடியாது.''

எவ்வளவோ உயரத்துக்கு அவளைப் பறக்கவிட்டான் வாசு. இருந்தாலும் அது ஒரு அந்தரத்தானே என்ற எண்ணம் ஏற்பட்டது மனோன்மணிக்கு. அவளை அங்கேயே விட்டுவிடப் போகிறானா?... அல்லது அடித்தளத்துக்குத் தள்ளிவிடப் போகிறானா? எதுவும் புரியவில்லை அவளுக்கு.

''உனக்கு இதனால் அவதிதான் உண்டாகும், மனோ. அவமானம்...? அது எனக்குத்தான் ஏற்படும். சமூகத்தின் குற்றச்சாட்டுக்கு ஆளாகப்போவது நீயல்ல; நான்தான்.''

இரும்புக் குண்டுகளை எடுத்துப் போட்டதுபோல அந்தச் சொற்கள் மனோன்மணியின் உள்ளத்தைப் பாழ் செய்தன. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை ஒழுங்காக வினியோகிப்பதுபோல் அவன் தன் கருத்துக்களை வழங்கியது கடுமையான சிந்தனையின் விளைவு என்பது அவளுக்குப் புரிந்திருந்தது. இனி திருத்தத்துக்கோ மாற்றத்துக்கோ வழியே ஏற்படாது. அசைவற்றுப்போன இடத்தில் அவளை ஆணியடித்துப் பொருத்திவிட்டு வாய்க்கும் ஒரு பூட்டுப் போடப்பட்டால்...

''ஆனால்... மனோ!... நான் எதுவும் ஆகிவிட்டேன் என்ற கவலை எனக்கில்லை. அந்த நினைப்புகூட எனக்கு ஏற்படவில்லை. நீ என்னை எப்படி ஆக்கியிருக்கிறாய் என்பதைத்தான் நினைக்கிறேன். என்னால் நிர்ணயிக்க முடியாமல் போன உன்னுடைய எதிர்காலத்தை ஒரு பத்திரிகைக்காரன் நிலைநிறுத்தி விட்டானே என்றுதான் வருந்துகிறேன்.''

அதற்குமேல் மனோன்மணியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

''உன்னால் முடியாத எதையும் வேறு எவரும் என்னிடம் செய்துவிட முடியாது, அண்ணா'' என்றாள்.

ஒரு பிணப் பெட்டியைப் பார்ப்பதுபோலத் தன் தங்கையின் முகத்தைப் பார்த்தான் வாசு.

''மனோ உன்னை இனி எவரும் திரும்பிகூடப் பார்க்க மாட்டார்கள். பத்திரிகையில் உன் பக்கத்தில் புகைப்படமாக இருந்தானே அவன்தான் உன்னைப் பற்றி முடிவு செய்ய வேண்டியவன். அவனுடைய தயவில்தான் உன்னுடைய எதிர்காலமே இருக்கிறது.''

வகுக்கப்பட்ட பாதையைச் சுட்டிக் காட்டினான் வாசு; நடக்க வேண்டிய இவள் அதை உற்று நோக்கினாள்.

''அண்ணா! நெருங்கிப் பழகுபவர்கள் தங்கள் பண்புகளை ஒருவருக்கொருவர் ஆராய்ந்து பார்ப்பதில்லை. நான் பிறந்து வளர்ந்ததிலிருந்து என்னைப் பார்த்துப் பார்த்துப் பழகிவிட்டாய். அன்புக்குத்தான் நீ இடங்கொடுத்தாயே தவிர ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. அதனால்தான் உன் தங்கையைப் பற்றி நீ சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. என் உருவத்தை வைத்துக்கொண்டு வாழ்வை நிர்ணயிக்கிறாய்; என் உள்ளத்தில்...?''

அதற்குள் சிரித்துவிட்டான் வாசு. ஆழத்திலிருந்து வெளி வருபவை சத்துள்ளவை; அசைகிற காற்றில் உதிர்பவை சருகானவை. அந்தச் சிரிப்பின் பொருள் புரிந்தது மனோன்மணிக்கு. அதற்குப் பதில் சொல்வதைவிட எதிர்காலத்தை அவனுடையை பரிசீலனைக்கு விடுவதுதான் பயன் தரும் என்று நினைத்ததால் மௌனமாக அந்த அறையைவிட்டு வெளியேறினாள்.

# 6

மறைந்துபோன வாழ்நாட்களை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவது தான் என்பது மலர்ந்த பருவத்தில் உள்ள ஒரு பெண்ணுக்கு ஏற்படுவது சடலம் இருக்கும்போதே அதன் சாம்பலைப் பற்றி எண்ணிப் பார்ப்பது போலத்தான். காற்று கனமாவதும் நேரம் மூச்சற்றுக் கிடப்பதும் அமைதி அருவெறுப்பைத் தருவதும் உலகம் உளுத்துப்போய்த் தோன்றுவதும் இயற்கை ஒரு இயந்திரமாகி எண்ணங்களுக்குத் தொடர்பற்ற அசைவுகளாக ஆகிவிட்டது என்பதற்கான அறிகுறிகள்தான்.

ஒருநாள் மணிவண்ணனுக்கு ஒரு வக்கீல் நோட்டீஸ் வந்திருந்தது. சேகரன் அதை அனுப்பியிருந்தான்.

அந்த ஆசிரமத்தை அமைத்திருந்த இடம் அந்த ஊரைச் சேர்ந்த பணக்காரர் ஒருவருக்குச் சொந்தமானது. எந்தவித ஈடும் பெற்றுக்கொள்ளாமலே ஆசிரமத்தை நடத்த அந்த இடத்தைத் தந்திருந்தார். சேகர் அதை விலைக்கு வாங்கிவிட்டான். அந்த இடம் தனக்கு இன்றியமையாத தேவையாக ஆகிவிட்டதால் ஒரு மாதத்துக்குள் அதைத் காலி செய்துவிட வேண்டும் என்று வழக்கறிஞர்மூலம் தெரிவித்திருந்தான் அவன்.

அதை எடுத்துக்கொண்டு மனோன்மணி இருந்த இடத்துக்கே வந்துவிட்டான் மணிவண்ணன். அதைப் படித்த பிறகு இதுவரை நடந்த எல்லாவற்றுக்குமான காரணங்களைப் புரிந்துகொண்டாள் மனோன்மணி. மேலிடத்துக்குச் சென்ற புகாரிலிருந்து வேறிடந் தேட அனுப்பப்பட்ட நோட்டீஸ் வரை எதுவும் தொடர்பற்றவை அல்ல; தொடங்கி வளர்ந்தவைதாம்.

முப்பது நாட்கள்...! சூழ்நிலைகளால் அலைக்கழிக்கப்பட்ட அவளுக்குக் காலம் தீர்ப்புக் கூறுவதற்கு எடுத்துக் கொண்ட தவணை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சுமையாக அவள் தலையில் ஏறி அமருகிறது. அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா அல்லது உயிரோடு தரைக்குள் புதைந்துபோய் விடுவாளா? நெஞ்சை அரிக்கத் தொடங்கிய நினைவுகளை மனோன்மணியால் அடக்கி வைக்க முடியவில்லை.

ஒவ்வொரு நாளும் அலைந்தாள் மனோன்மணி. நெருங்கிப் பழகியவர்கள் அனைவரையும் நினைவுக்குக் கொண்டுவந்து அவர்களை அணுகி உதவி கேட்பதையே அன்றாட வேலையாக ஆக்கிக் கொண்டாள். அவர்கள் எல்லாம் அன்போடு அழைத்து உபசரிக்காதிருந்தால்கூட அவளுக்குக் கவலை ஏற்பட்டிருக்காது. அறிமுகமானவர்களாக காட்டிக் கொள்ளவில்லை.

''உங்களிடம் தனியாக சிறிது நேரம் பேச வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே அவளைத் தேடி வந்தான் மணிவண்ணன் ஒருநாள்.

மௌனமாக அவளைப் பார்த்தாள்.

''சேகரைச் சந்தித்துப் பேசினேன்.''

அசையாப் பொருளொன்றைப் பார்ப்பதைபோல அவனைப் பார்த்தாள்.

''நீங்கள் இதைவிட்டுப் போய்விட்டால் இந்த இடத்தைக் கேட்க மாட்டாராம்.''

உணர்வற்ற பார்வையை அதற்குமேல் சந்திக்க அவனால் முடியவில்லை.

''என்னால் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அது நடக்காது என்று சொல்லிவிட்டேன்'' என்று தன் இருதயத்தில் ஒரு துளியை அதில் வைத்து வெளியிட்டான் அவன்.

''எப்போது நான் வெளியேற வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றுகிறதோ அப்போது என்னிடம் சொல்லுங்கள், நான் போய்விடுகிறேன்'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தாள் மனோன்மணி.

இன்னும் ஏதோ சில நாட்கள்தாம் எஞ்சி இருந்தன. ஒட்டியிருந்த அத்தனையும் அவளைவிட்டு ஒதுங்கிப் போனதை உணர்ந்தாள் அவள். ஏதோ ஒன்றை அடைய வேண்டுமானால் மற்றெல்லாவற்றையும்

விட்டுக் கொடுக்கச் சொல்லுகிறது இந்த உலகம். அடைவதற்கான ஆசை வளர்ந்திருக்கிறது; விடுவதற்கான வலிவு கரைந்துவிட்டது.

அன்றைய பத்திரிகையில் அந்த ஊரைச் சேர்ந்த பணக்காரர் ஒருவர் கோவில் கும்பாபிஷேகத்துக்கு ஐயாயிரம் ரூபாய் அன்பளிப்புக் கொடுத்ததை அத்தியாவசியமாகத் தெரிவிக்க வேண்டிய செய்தியென்று மதித்ததால் கொட்டை எழுத்துக்களில் அதை வெளியிட்டிருந்தார்கள். படித்ததும் அவரைத் தேடி ஓடினாள் உடனே.

''வா, அம்மா, உட்கார்'' என்று அன்பாக அழைத்து அவளை அமரச் செய்தார் அவர்.

நம்பிக்கை பிறந்தது மனோன்மணிக்கு. எல்லா விஷயங்களையும் தெளிவாக அவரிடம் தெரிவித்தாள் அவள். கேட்டு முடிந்ததும் கேலியாக அவளைப் பார்த்தார் அவர். உள்ளே எழுந்து சென்று அவளுடைய புகைப்படம் வெளிவந்த செய்தித்தாளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

''இது உண்மையல்ல; அவ்வளவும் பொய். வேண்டுமென்றே செய்யப்பட்டது. அதை விளம்பரப்படுத்திவிட்டது அந்த பத்திரிகை.''

''உண்மையா பொய்யா என்று விசாரிக்க வேண்டியவர்கள் போலீஸார். என்னுடைய வேலை அல்ல.''

''நீங்கள் வேண்டுமானால் இந்த ஊர் போலீஸ் அதிகாரியிடம் கேட்டுப் பாருங்கள். அவருக்கு எல்லா விவரங்களும் தெரியும்.''

''உனக்குப் பிச்சை போட என்னை அலையச் சொல்லுகிறாயா? எழுந்து வெளியே போ.''

மனோன்மணி எழுந்து வெளியே வரவில்லை; பறந்து வெளியே வந்தாள்.

வழியில்தான் அந்த போலீஸ் நிலையம் இருந்தது. உள்ளே நுழைந்தாள் அவள். அந்த அதிகாரியும் அமர்ந்திருந்தார் அங்கே.

''வா, அம்மா உட்கார்'' என்றார் அவர்.

நடந்ததை எல்லாம் அவரிடம் சொன்னாள் மனோன்மணி. அதிகாரி சிரித்தார்.

''நீ அறிவில்தான் வளர்ந்திருக்கிறாய் அம்மா. அனுபவத்தில் வளரவில்லை. உணர்ச்சிகள்தான் அனைவரையும் இலட்சியவாதி

களாக்குகின்றன. அனுபவம் எல்லோரையும் எத்தர்களாக்கிவிடுகிறது. அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் பக்கந்தான் சமுதாயம், சர்க்கார் சட்டம் எல்லாம் இருக்கும், அனாதைகளால் அவர்களுக்கு ஆகவேண்டியது என்னம்மா இருக்கிறது?''

''உங்களுக்கென்று ஒரு கடமை இருக்கிறதல்லவா?'' அதிகாரி இன்னும் பலமாகச் சிரித்தார்.

''எனக்கென்று ஒரு வயிறும் இருக்கிறதே அம்மா!''

அதற்குமேல் பேசுவதற்கு எதுவுமில்லை என்று அவன் உணர்ந்ததால் அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினாள் மனோன்மணி.

ஒருநாள் காலை பத்து மணி இருக்கும். நாலைந்து லாரிகள் நிறைய ஆட்கள் ஆசிரமத்துக்கு எதிரில் இறங்கினர். அவர்கள் உள்ளே நுழைவது கண்ட ஆசிரமத்துப் பெண்கள் அனைவரும் அலுவலக அறைக்குள் புகுந்துகொண்டனர். மனோன்மணி வெளியே வந்து நின்றாள்.

அவள் தனியே நின்றாலும் அந்தக் கூட்டம் அவளைக் கடந்து செல்லவில்லை. வேலியிட்டது போல அவளைச் சூழ்ந்துகொண்டனர். அமைதி குலையாமல் அவர்களையே பார்த்தாள் அவள்.

''உங்களுக்கு என்ன வேண்டும்?''

''கூரைகளையெல்லாம் பிரிக்கப் போகிறோம்,'' என்றான் ஒருவன்.

ஒருவன் குரல் கொடுத்ததும் அதுவரை அமைதியாக நின்ற அனைவரும் ஆளுக்கொன்றாகப் பேசத் தொடங்கினர்.

''சத்தம் போடாதீர்கள்!''

ஆசிரியையின் கட்டளைக்கு மாணவிகள் கட்டுப்படுவதுபோல அவளுடைய அந்தக் குரல் அனைவரையும் அடக்கிவிட்டது.

''யாராவது ஒருவர் பேசுங்கள்.''

எவருமே பேசவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளத் தொடங்கினர்.

''உங்களை யார் இதைப் பிரிக்கச் சொன்னது?''

''நான்தான்!'' என்று அந்தக் கூட்டத்துக்குப் பின்னாலிருந்து குரல் கேட்டது.

எல்லோரும் குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தனர். சேகர் வந்துகொண்டிருந்தான். வந்தவன் மனோன்மணியின் நேரெதிரே போய் நின்றான்.

''நீங்கள்தான் இதைப் பிரிக்கச் சொன்னீர்களா?''

''ஆமாம், இந்த இடத்தை நான் வாங்கிவிட்டேன். இப்போது இது எனக்குத் தேவைப்படுகிறது.''

''நாங்கள் வேறு இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிடைத்ததும் நாங்களே இதை உங்களிடம் ஒப்படைக்கிறோம்.''

''அதைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை, மிஸ்.மனோ. இப்போதே எல்லோரும் வெளியேற வேண்டும்.''

''ஆண்களாயிருந்தால் எப்படியும் சமாளித்துக்கொள்ள முடியும். இங்கே இருப்பவர்கள் எல்லோரும் பெண்கள். தயவு செய்து சிறிது அவகாசம் கொடுங்கள்.''

''ஒரு மாதம் தவணை கொடுத்திருக்கிறேன். நீங்கள் என்ன செய்வீர்களோ, எனக்குத் தெரியாது, வேண்டுமானால் ஒரு மணிநேரம் காத்திருக்கிறோம். உடனே வெளியேறுங்கள்.''

இனியும் இறங்கிப் பேச மனோன்மணிக்கு மனம் வரவில்லை.

''பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சமுதாய சேவை செய்வதாகச் சொன்னவர்கள் நீங்கள்தானே. இதுதான் அந்தச் சேவையோ?''

மனோன்மணி இதைச் சொன்னவுடன் சேகர் அவளை மட்டும் பார்க்கவில்லை. சுற்றி நின்றவர்களை ஒருமுறை பார்த்தான். ஏதோ பேச்சுவார்த்தை நடக்கிறது என்ற எண்ணத்தால் அதன் தொடர்ச்சியை எதிர்பார்த்தார்கள் அனைவரும். அவனுக்குக் கோபம் ஏற்பட்டது.

''ஏன் நிற்கிறீர்கள்? போய் எல்லாவற்றையும் பிரித்து எறியுங்கள்.'' என்று கத்தினான் அவன்.

''நில்லுங்கள்!'' சென்றவர்களை நிறுத்திவிட்டது இந்தக் குரல். வென்றவள் நின்றவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

''உள்ளே இருக்கும் எல்லா பெண்களும் உடனே வெளியில் வாருங்கள்'' என்று உரத்துக் குரல் கொடுத்தாள் உடனே.

எல்லா பெண்களும் அங்கே கூடிவிட்டனர். அவர்களோடு மணிவண்ணனும் வந்தான்.

''எவரும் நுழையாதபடி எல்லோரும் குறுக்கே படுத்துக் கொள்ளுங்கள்.''

வரிசையாக வழிகளை அடைத்துக் கொண்டு அத்தனை பெண்களும் கீழே படுத்தனர்.

''உங்களுக்குத் தைரியமிருந்தால் இவர்களைத் தாண்டிப் போய் உங்களால் செய்ய முடிந்ததைச் செய்யுங்கள்'' என்றாள் மனோன்மணி சேகரைப் பார்த்து.

சுற்றிச்சுற்றி எல்லோரையும் பார்த்தான் சேகர். ஒருவர்கூட நகரவில்லை. எல்லோரும் தயங்குவதை உணர்ந்தான்.

''பெண்களுக்கு மரியாதை கொடுப்பது தமிழ்நாட்டுப் பண்புகளில் ஒன்று'' என்றான்.

''அவர்களை அடித்து விரட்டச் சொல்லுவது அமெரிக்காவில் சொல்லிக் கொடுக்கப்பட்டதா?'' என்றாள் அவள்.

வீசி எறியப்பட்ட கல் வேகங் குறையாமல் தாக்கி சேகரைக் காயப்படுததியது. வேதனை தாங்காது துடித்துப் போனதை வெளிக்குக் காட்டிக் கொள்ள முடியாமல் தவித்தான் அவன்.

காலை நேரம் தன் எல்லைவரை வந்து கடும் பகலிடம் அந்த நாளை ஒப்படைத்துவிட்டு மறைந்தது. கடும்பகல் அளவுக்கு மீறி உணர்ச்சி வயப்பட்டு விட்டதால் வெகு விரைவில் தளர்ந்தது. மாலை நேரம் முடிவை எதிர்பார்க்கும் முதுமையைப்போல மெல்ல நகரத் தொடங்கியது.

படுத்த பெண்கள் அப்படியே பதிந்துபோய் விட்டார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டது சேகரனுக்கு. அசையாமல் அத்தனை பேரும் அப்படியே கிடந்தனர் அதுவரையில்.

''இரவில் வந்து இந்த இடத்தைச் சுற்றி இரும்புவேலி போட்டு விடுகிறோம். அப்போது என்ன செய்கிறாய் என்று பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு எல்லோரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான் அவன்.

காய்ந்து ஓய்ந்து களைத்துப் போயிருந்த அந்தப் பெண்கள் எழுந்து நின்றனர்.

''எல்லோரும் உள்ளே போய் படுத்துத் தூங்குங்கள். நான் வெளியே நின்று இரவு எப்படி அவர்கள் வேலி போடுகிறார்கள் என்று பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தாள் மனோன்மணி.

பார்வதியும் மணிவண்ணனும் அவளைத் தொடர்ந்தனர்.

''பார்வதி! நீ போய் உள்ளே தூங்கு. நோய்வாய்ப்பட்ட நீ வெளியே பனியில் இருக்கக் கூடாது'' என்றாள் மனோன்மணி.

''நான் உன்னோடுதான் இருப்பேன், மனோ'' என்றாள் அவள்.

''நீ பிடிவாதம் பிடித்தால் நான் வீட்டுக்குப் போய் விடுவேன்,'' என்றாள் மனோன்மணி.

அவளைப் பற்றி சரியாகத் தெரிந்தவளாகையால் அதற்குமேல் பேசுவதில் பயனில்லை என்பதால் ஆசிரமத்துக்குள் சென்றாள் பார்வதி.

மணிவண்ணனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை மனோன்மணி. அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''என்மேல் உங்களுக்குக் கோபமா?'' என்று கேட்டான் அவன்.

''கோபம் உண்டாக எந்தவிதக் காரணமும் இல்லை, பரிதாபப்படுகிறேன். அவ்வளவுதான்,'' என்று சொல்லி விட்டுப் பார்வையை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டாள் அவள்.

''நான் என்ன தவறு செய்தேன்?''

''தவறுகளை எவரும் செய்வதில்லை. தடுமாறி விடுகிறார்கள். அது தவறுகளை உண்டாக்கி விடுகிறது.''

''நான் உங்களைப்போல பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன் அல்ல. எல்லோரையும் எதிர்த்துக்கொண்டு எதுவும் செய்வது என்பது என்னுடைய சக்திக்கு மீறிய காரியம். இதையெல்லாம் கவனிக்காமல்...''

அவன் சொல்லிக்கூட முடிக்கவில்லை.

''மிஸ்டர். மணிவண்ணன்'' என்ற அழைப்பால் அவனுடைய பேச்சை தடுத்து நிறுத்தினாள் மனோன்மணி.

அறுந்துபோன பட்டம் பறந்து செல்வதைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் சிறுவனைப்போல் அவளைப் பார்த்தான் மணிவண்ணன். தன்னுடைய வலிவின்மை காரணமாக ஏற்பட்ட இயலாமை அந்தச் சிறுவனுக்கு ஏமாற்றம் அளிப்பது போலானது அவன் மனநிலை.

''இந்த ஆசிரமத்தை ஆரம்பித்ததே நீங்கள்தான். நான் இடையில் வந்தவள். இத்தனை பெண்களும் உங்களை நம்பித்தான் தங்களுடைய வாழ்வின் பாதுகாப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ஆபத்து வரும்போது விலகிக்கொள்ள உங்களுக்கு வெட்கமாக இல்லையா? பொல்லாங்கு நேரும்போது புகலிடம் தேடுகிற நீங்கள் புகழ் கிடைக்கும்போது மட்டும் அதை அப்படியே அனுபவிக்கிறீர்களே. செடி தன்னுடைய தொடர்ச்சிக்காகத்தான் மலரை உருவாக்குகிறது. பறிக்கப்படுவது மலரின் தவறல்ல. ஆனால்... பறிக்கப்பட்ட மலரால் செடிக்கு எந்தவிப் பயனும் இல்லை. அந்த மலரும் நீண்ட காலம் வாழ்வதில்லை.''

உள்ளே உறங்கிக் கொண்டிருந்த அனாதைகளுக்கும் வெளியே நிறுத்தப்பட்டிருந்த இந்த அனாதைக்கும் எந்தவித வேற்றுமையுமில்லை என்று அவள் குறிப்பிட்டுக் காட்டிய பிறகும் அவளோடு பேசுவது பொருந்தாது என்பதை உணர்ந்தான் மணிவண்ணன். அங்கிருந்து அகன்றான்.

காலம் வளர்ந்தது. காரிருளில் சிக்கியிருந்த தாரகைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. மெல்லப் படர்ந்து மெதுவாகப் படியத் தொடங்கியது பனி. குளிர் தாங்காமல் எங்கெங்கோ புகுந்துகொள்ள இடந்தேடிய காற்று நுழைகிற இடங்களிலெல்லாம் ஏற்கனவே அது இருப்பதால் முடங்கிக் கொள்ள முடியாமல் தவித்தது.

எங்கெங்கிருந்தோ ஓடிவரும் மனிதர்களின் காலடி ஓசைகளால் எழுப்பப்பட்ட பிறகுதான் தான் அயர்ந்து உறங்கிப் போனது தெரிந்தது மனோன்மணிக்கு. எழுந்தாள். ''ஐயையோ!'' என்று அலறிக் கொண்டே உள்ளே ஓடினாள்.

தீ...! பற்றி எரிந்து சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. வெடித்துச் சிதறிய மூங்கில்கள் வெகுதூரம் பறந்து சென்றன. மேலே மண்டிக் கிடந்த புகைச் சுருளில்கூட செந்நிறம் காணப்பட்டது.

''ஐயோ பார்வதி,'' என்று கதறிக்கொண்டே அதன் உள்ளே பாய்ந்தாள் மனோன்மணி.

''வேண்டாம். நீங்கள் போகாதீர்கள்,'' என்று அவளுடைய கையைப் பற்றி இழுத்தான் மணிவண்ணன்.

கையை உதறிவிட்டு அந்தத் தீயைப் பிளந்துகொண்டு ஓடினாள் அவள்.

''மனோ, மனோ'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான் மணிவண்ணன்.

வாசு ஓடி வந்துகொண்டிருந்தான்.

''மனோ எங்கே?'' என்று மணிவண்ணனைக் கேட்டான் வாசு.

தீயை நோக்கி தன் கையைக் காட்டினான் அவன்.

''ஐயோ, மனோ!'' - அடுத்த வினாடி அவன் தீயினுள் மறைந்து விட்டான்.

ஒரு தோளில் மனோன்மணியையும் மறு தோளில் பார்வதியையும் போட்டுக்கொண்டு வாசு வெளியே வந்தபோது அந்தத் தீ தனக்கேற்பட்ட பசியைப் பெருமளவு போக்கிக் கொண்டு தணிந்து வந்தது. தீ அணைக்கும் என்ஜினைக் கொண்டு வந்தவர்கள் தண்ணீருக்காகத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

வசீகரிக்கும் செய்திகளுக்கே வாழ்க்கைப்படும் பத்திரிகையில், 'எதிர்பாராது ஏற்பட்ட தீயின் கொடுமைக்கு ஆசிரமத்துப் பெண்கள் அனைவரும் பலியானார்கள்,' என்ற செய்தி அடுத்த நாள் கொட்டை எழுத்துக்களில் வெளியிடப்பட்டது. தங்களுடைய பிழைப்புக்குக் குறை ஏற்படாத வரை எதையும் செய்கிற அந்தப் பத்திரிகையின் நிர்வாகிகள் நிம்மதி அடைந்தனர்.

பத்து நாட்கள் அடுத்தடுத்து ஒவ்வொன்றாக அழிந்தன. மக்கள் மனதில் அந்தத் தீ ஏற்படுத்தி இருந்த வடு அடியோடு மறைந்துவிட்டது.

மருத்துவமனையில் வாசு, மனோன்மணி, பார்வதி மூவரும் உட்கார்ந்திருந்தனர்.

''டாக்டர் போகச் சொல்லிவிட்டார், மனோ. புறப்படலாமா?'' என்று கேட்டான் வாசு.

''எங்கே?'' என்று கேட்டாள் மனோன்மணி.

''வீட்டுக்கு!'' என்று அவன் பதிலளித்தான்.

''நான் வரவில்லை, அண்ணா,'' என்றாள் அவள்.

''மனோ...!'' என்றழைத்துவிட்டு அவளையே பார்த்தான் வாசு.

தன் அண்ணன் என்ன சொல்லப்போகிறான் என்பதை அப்போதும் எதிர்பார்த்து அவனையே பார்த்தாள் அவள்.

''நான் பார்வதியை மணந்துகொள்ளப் போகிறேனே.''

பார்வதி திகைத்துப் போய் மனோன்மணியைப் பார்த்தாள்.

''ஆமாம், மனோ! தோட்டத்தைப் பராமரிப்பவனாக இருப்பேன் என்று எண்ணித்தான் உன்னை என்னிடத்தில் ஒப்படைத்துவிட்டுக் கண்மூடினார்கள் நம் அம்மாவும் அப்பாவும். ஆனால்... நானோ... அந்தத் தோட்டத்தில் விளையாடுபவனாக இருந்துவிட்டேன். அதனால் ஏற்பட்ட கோளாறுதானா இவையெல்லாம். எழுந்து வா! நாம் மூவரும் நம் வீட்டையே ஆசிரமமாக்கிவிடலாம்.''

அவன் நடந்தான். அந்தப் பெண்கள் இருவரும் அவனைத் தொடர்ந்தார்கள்.

/★★★/

சந்தியா பதிப்பகம்

